மேழிச்செல்வம்

MADRAS RECORD OFFICE
5108
12 OCT 1964
MADRAS



குரோதி ௵ • வைகாசி ௴

பழ அபிவிருத்தி



மே மாதம் கூனூரில் நடந்த பழக் கண்காட்சி போட்டியில் திருநெல் வேலி ரஹ்மானிய நர் சரி உறிமையாளர் மாநில கவர்னரிட மிருந்து திரு கஸ்தூரி சீனிவாசன் கோப்பைப் பரிசை பெறுதல்.



ரஹ்மானியா நர்சரி கண் காட்சியில் வைத்திருந்த 85 தினுசு மாம்பழங்கள்.

போட்டியில் வெற்றிபெற்ற தனியார் பழப் பண்ணை யாளர் ஒருவர் கவர்ன ரிடமிருந்து பரிசு பெறுதல்.

மேழிச்செல்வம்

※

வெளியிடுபவர் :

தமிழ்நாடு விவசாயத் துறை நெறியாளர்
சென்னை-5.

வருட சந்தா	ரூ.	3·00
தனிப்பிரதி	ரூ.	0·25
ஆண்டு மலர்	ரூ.	0.50

உள்ளுரை

பக்கம்

பழ அபிவிருத்தி	5
ஹொசூர் விவசாயிகளுக்கு F.C.V. புகையிலை பயிரிட பண உதவி	6
கரும்பு விளைச்சலுக்குப் பரிசு ..	6
புகையிலை பாடம் செய்வதில் பரிசோதனை	6
பழச்சாகுபடி குறிப்புகள் ..	8
தஞ்சை மாவட்டத்தில் பிந்திய தாளடிப் பட்டத்திற்கு ஏ.எஸ்.டி. 5 (கார்த்திகை சம்பா) ..	12
கருங்கண்ணிப் பருத்தி ஆராய்ச்சியின் சாதனைகள்	14
உரப் பிரச்னை தீர்க்கும் பசுந்தாள் உரங்கள்	16
வாழையில் தீவிர சாகுபடித் திட்டம்.	17
தென்னை தாய்மரப் போட்டி (1962–63) .. .. (திருச்சிராப்பள்ளி வட்டம்)	18
மண்வளப் பாதுகாப்பு பரிசோதனை முடிவுகள்	18
வீட்டுத் தோட்டத்தைக் காப்பீர்	20
விவசாயச் செய்திக் கதிர்	25
தஞ்சை தீவிர சாகுபடித் திட்டத்தில் என் அனுபவம் ..	26
வெற்றிப் பாதை (விவசாய விளம்பர நாடகம்)	27
1964-ம் ஆண்டு மார்ச் மாதக்கால நிலை அறிக்கை	29
மரமும் ஓர் வரலாற்றுச் சின்னம்	30

விளம்பரங்கள் :

ஐ.சி.ஐ.	4
வால்டாஸ் லிமிடெட் ..	7
கஜலக்ஷ்மி	11
பொட்டாஷ்	13
பாக்டம்பாஸ்	19
ஸ்ரீ முருகன் (குடிசைத் தொழில்)	21
ராஜா பண்ணைத் தோட்டம் ..	23
சேலம் நர்சரி	28

இலேகளின் அடிபாகத்திலிருந்து சததை உறுஞ்சி பூச்சிகள் பிழைக்கின்றன. 8 அல்லது 10 நாட்களுககு ஒரு முறை 'காமெக்ஸேன்' டி.025 ஐத் தூவியாகிலும் அல்லது 'காமெக்ஸேன்' டபிள்யு. டி. பி. யை தெளித்தாகிலும் மிள காய்ச் செடிகள் நல்ல முறையிலும் ஆரோக்கியத்துடனும் வளர வழி செய்யவும்.

மேற்கொண்டு விவரங்களே உங்களுக்கு அருகாமையில் உள்ள ஐ. ஸி. ஐ. காரியாலயத்தில் விசாரித்துப் பெற்றுக் கொள்ளவும்.

ICI

இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ்
(இந்தியா) பிரைவேட் லிமிடெட்
கல்கத்தா, பம்பாய், சென்னே, புது டில்லி

IPC-521 TM

மேழிச்செல்வம்

சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனு
லுழந்தும் உழவே தலை.

மலர் 21 | குரோதிஞூ வைகாசிமீ —1964—மே-ஜூன் (1889–1964) | இதழ் 5

பழ அபிவிருத்தி

(விவசாயச் செய்தி பிரிவு, சென்னை.)

ஆரோக்கிய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான "பழங்கள்" காய்கறிகள் போன்ற காப்பு உணவுப் பொருள் களின் உற்பத்தியும், உபயோகமும் நமது மாகாணத்தில் மிகவும் குறைந்த நிலையில் உள்ளன. பொதுவான அத்தியாவசிய சமநிறை உணவு அளவிற்குக் கூட உணவில் பழங்களையும் சேர்த்துக் கொள்ள அவைகளின் உற்பத்தியைப் பெருமளவு அதிகரித்தல் மிகவும் அவசியம். டாக்டர் அக்ராய்டுவின் அறிவுரைப்படி குறைந்த பட்சம் 3 அவுன்ஸ் பழங்களாவது நம் அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

மக்களின் பழத்தேவையையறிந்த, அரசாங்கமும் பழ அபிவிருத்தி திட்டங்கள் பல தீட்டியுள்ளன. குறிப்பாக புதிய பழத் தோட்டங்கள் அமைத்தல், பழைய தோட்டங்களை உரம் பயிர்ப் பாதுகாப்பு முறைகளை கையாண்டு புதுப் பித்து, உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல் போன்றவற்றிற்கு கடன் வசதியும், இலவச தொழில் நுட்ப வசதிகளும் அளித்து பழத் தோட்டக்காரர்களுக்கு பெரும் உதவி புரிந்து வருகிறது.

பழ அபிவிருத்தித் திட்டங்கள் 1957-ஆம் ஆண்டிலிருந்து அமுலில் இருக்கின்றன. இரண்டாம் ஐந்தாண்டு திட்ட முடிவில் அரசாங்க கடனுதவியால் 1,236 எக்கராவில் புதிய பழத் தோட்டங்கள் அமைக்கப்பட்டன. 945 எக்ச்ர் பழைய தோட்டங்கள் புதுப்பிக்கப்பட்டன. மூன்றும் திட்டத்தில் 5,000 எக்கரில் புதிய பழத் தோட்டங்கள் உருவாக்கவும், 15,000 எக்கர் பழைய தோட்டங்களில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டு பழ உற்பத்தியை அதிகரிக்கச் செய்யவும் திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அரசினர் பல மாதிரிப் பழப் பண்ணை ஆரம்பித்து லாபகரமான பழச் சாகுபடியை கண்கூடாக காட்டியும் வருகிறார்கள்.

மேலும் திராக்ஷை, மா, வாழை போன்றவைகளில் "உத்யான் பண்டிட்" பட்டத்திற்கான மாநில போட்டிகளை நடத்தி பழ உற்பத்தியாளருக்கு நல்ல ஊக்கம் அளிக்கப்படுகின்றது.

பழ அபிவிருத்திக்கு முக்கிய கருவியாக இருந்து வருவது தரமான பழச் செடிகளே. ஏனெனில் பழச்செடிகளின் தரத்தை நட்ட பல வருடங்களுக்குப் பின்னரே தான் நாம் அறியமுடியும். ஆகவே நல்ல ஜாதிக் கன்றுகளையே உற்பத்தி செய்து, விநியோகித்தல் மிகவும் அவசியம். பழச்செடிகள், ஒட்டுகள், விதைகள் உற்பத்தியில் அரசினர் தகுந்த கவனம் செலுத்தி வருகின்றனர். தற்பொழுது மாநிலத்தின் பல மாவட்டங்களிலும் 13 பழ ஆராய்ச்சி மாதிரி நாற்றுப் பண்ணைகளில் இவ் வேலை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால் இவைகளின் உற்பத்தி, தேவையைப் பூர்த்தி செய்யுமளவுக்குப் போதுமானதாக இல்லை. ஆகவே சில தனியார் பழச்செடி விதைப் பண்ணைகள் உரிய சோதனைக்குப் பின் அரசினரால் அங்கீகரிக்கப்பட்டன. தற்போது 31 அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார்

பண்ணைகள் பழச் சாகுபடியாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன. தனியார் பழச்செடி, விதைப் பண்ணையாளர்கள் நாட்டின் பல இடங்களில் நடத்தப்படும் கண்காட்சிகளிலும், கருத்தரங்குகளிலும் பங்கு கொள்வது பொதுமக்கள் இப் பண்ணைகளிலிருந்து உற்பத்தியாகும் செடிகள், விதைகள், முதலியவற்றின் சிறப்பையும், தரத்தையும் அறிய பெரும் வாய்ப்பளிக்கிறது.

இவ் வருடம் மே மாதம் 23-ம் தேதியன்று கூனூரில் நடைபெற்ற 10-வது வருடாந்திர பழக்காட்சியில் 103-க்கும் மேலானவர்கள் பழக்கண்காட்சி போட்டியில் கலந்து கொண்டார்கள். திருவாளர்கள் ரஹ்மானியா நர்சரி, திருநெல்வேலி, எஸ். ஐ. ஹாருன்சேட், பர்லியார் எஸ்டேட் கூனூர், பரூக் நர்சரி, கோவை., எஸ். ஏ. எஸ். எம். தனைக்கோடி நாடார், தோட்டக்காரர், விருதுநகர், லிங்கம் பிரதர்ஸ் நர்சரி, எஞ்சிலின் நர்சரி, கூனூர் போன்ற தனியார் பழச்செடி, விதைப் பண்ணையார்கள் கலந்து கொண்டார்கள். திருவாளர்கள் ரஹ்மானியா நர்சரி திருநெல்வேலி 85 தினுசு மாம்பழ ரகங்களை கண்காட்சியில் வைத்திருந்தது ஒரு சிறப்பான அம்சமாயிருந்தது. அதற்காக திரு. கஸ்தூரி சீனிவாசன் கோப்பைப் பரிசையும் பெற்றனர்.



பழக் கண்காட்சிப் போட்டி பரிசுவிழா வைபவத்தில் முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம்

கூனூர் சிம்ஸ் பார்க்கில் நடந்த இவ்விழாவை முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் துவக்கி வைத்தார். மேன்மை தங்கிய தமிழ்நாட்டு கவர்னர் திரு ஜெயசந்திர சாமராஜ உடையார் அவர்கள் பரிசு வழங்கினார்கள்.

இது போன்ற விழாக்களில் தனியார் பழச்செடி பண்ணையாளர்களும் பொதுமக்களும் கலந்து கொள்வது, பழத்தொழிலின் முன்னேற்றத்தின் அறிகுறியாக விளங்கும்.

தனியார் பழச்செடி பண்ணையாளர்கள்சிறந்த ஜாதிக் கன்றுகளையே தயாரித்து பொது மக்களுக்கு அளித்து வரவேண்டும். பொதுமக்கள் அரசினர் அளிக்கும் கடன், சலுகை வசதிகளையும் பயன்படுத்தி பழத் தோட்டங்களை பெருவாரியாக ஏற்படுத்தி, பழவகை உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

ஹொசூர் விவசாயிகளுக்கு F.C.V. புகையிலை பயிரிட பண உதவி

ஹொசூர் பகுதிகளில் F.C.V. புகையிலைக்கு இரசாயன உரம் வாங்கவும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் வாங்கவும் அரசாங்கம் ரூ. 2,500 தர ஒப்புதலளித்திருக்கிறது. F.C.V. புகையிலை பயிரிடுவதை அப்பகுதிகளில் பெருக்குவதே இதன் நோக்கம்.

	ரூ.
எக்கருக்கு ரூ. 130 வீதம் இரசாயன உரம் 40 எக்கருக்கு (20+20 எக்கர்)ரூ. 5,200 அதில் 25 சதவீதம் மானியம்	1,300
மருந்துகள் எக்கருக்கு ரூ. 30 வீதம் 40 எக்கருக்கு.	1,200
மொத்தம் ..	2,500

(தமிழ்நாடு அரசாங்க ஆணை எண். 1594 உணவு-விவசாயம் தேதி 16—5—64).

கரும்பு விளைச்சலுக்குப் பரிசு

தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த குறிஞ்சிப்பாடியில் எக்கருக்கு 116 டன் 257 கிலோ கரும்பு விளைவித்து திரு. தங்கவேல் முதலியார் அவர்கள் மகன் திரு. ஏ. டி. சுப்ரமணியம் அவர்கள் 1962–63-ம் ஆண்டிற்குரிய மாகாண கரும்பு விளைச்சல் போட்டிப் பரிசைப் பெற்றார். அவருக்கு வாழ்த்துக்கள்.

புகையிலை பாடம் செய்வதில் பரிசோதனை

யாழ்ப்பாணம் முறையில் புகையிலையை பாடம் செய்வது பற்றி வேதாராண்யத்தில் பரிசோதனை நடத்த அரசாங்கம் இந்திய மத்திய புகையிலை குழுவிற்கு அனுமதி அளித்துள்ளது. இதற்காக இவ்வருஷத்திற்கு ஆகும் ரூ. 750 செலவை விவசாய இலாகா மேற்கொள்ளும்.

[G.O. Ms. No. 171, F. & A., dated 29th May 1964.]

இரண்டு திறமை மிக்க கருவிகள்

பண்ணை வேலைகளில் மேலும் சிறந்த சிக்கனத்திற்கும், அதிகமான விளைச்சல்களுக்கும்



டிராக்டரில் பொருத்தப்பட்ட வட்டமான ஆப்ஸெட் (OFFSET) பரம்புச் சட்டங்கள்

டிராக்டரில் பொருத்தப்பட்ட வட்டமான ஆப்ஸெட் பரம்புச் சட்டங்கள் செப்பனிடப்படாத கரடுமுரடான பாதைகளிலும், பழத்தோட்டங்களிலும் திறந்த வெளி நிலங்களிலும் திறமைமிக்க சேவை அளிப்பதற்கென அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை சிறந்த முறையில் புல்பூண்டுகளை வெட்டி, மண்கட்டிகளை உடைத்து, மண்ணைப் பொடியாக்கி, அதில் காற்றுப் புகும்படியாகச் செய்கின்றன. இவற்றின் தனிப்பட்ட தன்மைகளைப் பாருங்கள்.

1. எல்லாவிதமான பிரமாண்டமான முப்பொருத்த இணைப்புகளிலும் பொருந்தும்படியாக அமைக்கப்பட்டிருக்கிறது. (அது எந்த உருளும் டிராக்டரானாலும் சரி)
2. வளைவுகளில் வெல்டு செய்யப்பட்ட வலுவான எஃகுச் சட்டம்.
3. இறக்குமதி செய்யப்பட்ட, உஷ்ணத்தில் பதனிடப்பட்ட வட்டத்தகடுகள்.
4. நிச்சயமாக ஆழமாக ஊடுருவிச்செல்லும் தன்மை.
5. கரடுமுரடான பூமியில் வளைந்துகொடுப்பதற்கேற்ப இணங்கிவரும் ஸ்ப்ரிங் பொருத்தப்பட்ட மேல் இணைப்பு.

மேலும், 14 முதல் 50 ஹார்ஸ் பவர் கொண்ட எந்த டிராக்டருடனும் பொருந்தும் இணைப்பு வகைகளும் கிடைக்கும்.



டிராக்டர்களில் பொருத்தப்பட்ட, நிலத்தைப் பண்படுத்தும் இயந்திரங்கள் (கல்டிவேடர்ஸ்)

டிராக்டர்களில் பொருத்தப்பட்ட, நிலத்தைப் பண்படுத்தும் இயந்திரங்கள், இந்தியாவில் பரந்த அளவில் மாறுபட்ட மண்ணின் தன்மைகளுக்கேற்றபடி அமைக்கப்பட்டிருக்கின்றன, லேசான மண்முதல் அடர்த்தியான மண்கள்வரை எல்லா மண்களிலும் உழுவதற்கான பற்பல தேவைகளைப் பூர்த்தி செய்யும் வெவ்வேறு மாடல்களில் கிடைக்கும். நீரியல் விசையும் (ஹைட்ராலிக் லிப்டு), முப்பொருத்த இணைப்பும் கொண்ட, 14 முதல் 50 ஹார்ஸ் பவர் கொண்ட உருளும் டிராக்டர்களுக்கேற்ற வெவ்வேறு அளவுகளில் கிடைக்கும்.

முழு விவரங்களுக்கு எழுதுங்கள்:

VOLTAS

வால்டாஸ் லிமிடட்

எர்த் மூவிங், மைனிங், அண்டு அக்ரிகல்சரல் டிவிஷன்,
டாக்டர் அம்பேட்கர் ரோடு, சின்ச்போக்லி, பம்பாய்-33

கல்கத்தா . மதராஸ் . புதுடில்லி . பங்களூர்
கொச்சின் . அஹமதாபாத் . ஸெகந்திராபாத்
பாட்னு . நாக்பூர் . போபால்.

VOL. 618 A TAMEVEREST

பழச்சாகுபடி குறிப்புகள்

[எல். சுந்தரராஜன், B.SC. (Ag.), D. H., கிருஷ்ணகிரி.]

(1) மா

மண்	எவ்வித நிலத்திலும் வளரும்.
இனப்பெருக்க முறை	ஒட்டுச் செடிகளை நடுதல்.
நடவுச் செடியின் வயது.	$1\frac{1}{2}$ வருடம்.
நடும் பருவம்	ஜூலை முதல் டிசம்பர் வரை
குழி அளவு	2 முதல் 3 கனஅடி
இடைவெளி	40 அடி × 40 அடி எக்கருக்கு 27 செடிகள்.

உரமிடுதல்

முதல் 5 வருடங்களுக்கு

(1) மாட்டெரு 2 முதல் 3 கூடை

அல்லது

கடலைப்பிண்ணாக்கு 2 ராத்தல்

(2) எலும்புத்தூள் 2 ராத்தல்

ஒவ்வொரு வருடமும் பசுந்தாள் உரப் பயிர் விதைத்து மடக்கி உழவும் மரத்தைச் சுற்றி ஒரு அடி தள்ளி $\frac{1}{2}$ அடி ஆழத்திற்கு கிடங்கு தோண்டி அதில் உரமிட்டு மூடவும்.

பெரிய மரங்களுக்கு

மாட்டெரு	100 ராத்தல்
அமோனியம் சல்பேட்	5 ,,
எலும்புத்தூள்	15 ,,
சாம்பல்	30 ,,

மரத்திலிருந்து 2' தள்ளி கிடங்கு எடுத்து உரமிட்டு மூடவும்.

அறுவடை	மார்ச்–ஜூலை
காய்க்கும் வருடம்	5-வது வருடம்; 12-வது வருடம் நல்ல மகசூல்
மகசூல்	10-வது வருடம் வரை மரத்திற்கு ஒரு வருடத்திற்கு சராசரி 500 பழங்கள்.

8 வருடம் வரை ஊடு பயிர் செய்யலாம்; பப்பாளி, அன்னாசியை ஊடு பயிராக நடலாம்.

(2) வாழை

மண்	வடிகால் வசதியுள்ள வளமான பூமி; தஞ்சாவூரில் படுகை நிலங்கள் (மேட்டு நிலங்கள்.)
நடவுக் கன்றுகள்	3 முதல் 4 மாதமான வீரியமாக வளரும் கன்றுகளை நடுதல்.
நடும் பருவம்	ஆகஸ்டு முதல் டிசம்பர் வரை.
குழி அளவு	2 கனஅடி
இடைவெளி	9'×9'
	எக்கருக்கு 538 கன்றுகள்.

உரமிடுதல்

ஒரு செடிக்கு ஒரு முறைக்கு

மாட்டெரு	25 ராத்தல்
அமோனியம்சல்பேட்	10 அவுன்ஸ்

உரங்களை ஆகஸ்ட் மாதம் ஒரு முறையும் டிசம்பர் மாதம் ஒரு முறையும் இடவும்.

அறுவடை

நட்டு 7 மாதங்களுக்குப் பின் பூக்க ஆரம்பிக்கும். பின் 3 மாதங்களுக்குப் பின் பழங்கள் பழுக்கின்றன.

காய்ப்பு	நட்டு 10 மாதம் முதல் 14 மாதம் வரை.
மகசூல்	முதல் 2 வருடங்களில் 2 தாரும், 3-வது வருடத்தில் இலைகள் மட்டும் வெட்டலாம். எக்கருக்கு சராசரி 12,000 — 15,000 ராத்தல்.

(3) எலுமிச்சை வகை

(அ) நாட்டு எலுமிச்சை

மண்	நல்ல இளக்கமான மண் தேவை. வடிகால் வசதியுள்ள எவ்வித நிலத்திலும் வரும். எனினும் இருமண் பாடுள்ள நிலம் சிறந்ததாகும்.
இனப்பெருக்க முறை	விதை, பதியம் அல்லது மொட்டுக் கட்டுதல்
நடவுச் செடியின் வயது	1 வருடம்.
நடும் பருவம்	ஜூலை முதல் செப்டம்பர் வரை
குழி அளவு	3 கன அடி
இடைவெளி	25'×25' எக்கருக்கு 75 செடிகள்
உரமிடுதல்	நட்டு ஒரு வருடமானதும் செடி ஒன்றிற்கு,
மாட்டெரு	20 ராத்தல்
எலும்புத்தூள்	1 ,,
சாம்பல்	3 ,, போடவும்.

முதல் 5 வருடத்திற்கு மேற்கூறிய அளவை இருமடங்காக்கவும்.

7 முதல் 20 வருட வயதுள்ள மரத்திற்கு

மாட்டெரு	..	80 ராத்தல்
சூப்பர்	..	20 ,,
சாம்பல்	..	30 ,,

அறுவடைப் பருவம்

வருடம் முழுவதும் காய்க்கும்.

ஜனவரி—ஏப்ரல், ஆகஸ்ட்—செப்டம்பர் பருவங்களில் காய்ப்பு அதிகம்.

காய்க்கும் வருடம்—4-வது வருடம்.

மகசூல்—ஒரு மரத்திற்கு 1,000—1,200 பழங்கள்.

வெயிலின் கொடுமையிலிருந்து அடிமரத்தைக் காப்பாற்ற சுண்ணும்பைப் பூசலாம். 'கேங்கர்' என்னும் புள்ளி நோய் ஏற்படாமலிருக்க போர்டோக் கலவை தெளிக்க வேண்டும். காய்ந்த குச்சிகளை நீக்க வேண்டும்.

(ஆ) கொடி எலுமிச்சை

(குறிப்பாக மால்டா லெமன்)

இனப்பெருக்க முறை	.. பதியன்கள் நடுதல்
குழி அளவு	.. 2 கன அடி
இடைவெளி	.. 15′×15′

எக்கருக்கு 200 செடிகள்

காய்க்கும் வருடம்—2-வது வருடம்.

இதர விவரங்கள் நாட்டு எலுமிச்சைக்குக் கூறியது போலவே.

(இ) சாத்துக்குடி

மண் ..	.. நல்ல இளக்கமான மண்.
இனப்பெருக்க முறை	.. மொட்டுக் கட்டுதல், விதை.
நடவுச் செடியின் வயது	.. 1 அல்லது 1½ வருடம்.
நடும் பருவம்	.. ஜூலை முதல் செப்டம்பர் வரை.
குழி அளவு ..	.. 2 முதல் 3 கன அடி.
இடைவெளி ..	.. 24′ முதல் 30′× 24′ முதல் 30′

எக்கருக்கு 75 முதல் 48 செடிகள்.

உரமிடுதல்

மாட்டெரு ..	.. 20 ராத்தல்
அமோனியம் சல்பேட்	.. 4—5 ராத்தல்
சூப்பர் ..	.. 5—10 ராத்தல்

அறுவடை பருவம்

முக்கிய பருவம்

நவம்பர் முதல் மார்ச் வரை

2-வது பருவம்

ஜூன் முதல் நவம்பர் வரை

3-வது பருவம்

மார்ச் முதல் ஜூன் வரை

காய்க்கும் வருடம்—மொட்டு கட்டிய செடிகள் 5-வது வருடம், விதைச் செடிகள் 7-வது வருடம்.

மகசூல்—ஒரு மரத்திற்கு 1,000 பழங்கள்.

தேமல் (leaf mottling) நோய்க்கு 'ஜிங்க் சல்பேட்'—சுண்ணும்புக் கலவையைத் தெளிக்கவும்.

காய்ந்த குச்சிகளை நீக்கி விட வேண்டும்.

முதல் 5 வருடங்களுக்கு பசுந்தாள் உரப் பயிர் ஊடுபயிராக விதைக்கலாம்.

(4) பப்பாளி

மண் ..	.. வடிகால் வசதியுள்ள சிவப்பு வண்டல் நிலம்.
இனப்பெருக்க முறை	.. விதை (ஒரு எக்கருக்கு 4—8 அவுன்ஸ் தேவை)
நடவுச் செடியின் வயது	.. 2 மாதம்
நடும் பருவம்	.. ஜூன் முதல் நவம்பர் வரை.
குழி அளவு	.. 2 கன அடி
இடைவெளி	.. 10′×8′

எக்கருக்கு 680 செடிகள்.

உரமிடுதல்

4-வது மாதம்	.. மாட்டெரு 80 முதல் 100 ராத்தல் வரை.

பின் ஒவ்வொரு வருடமும் செடிக்கு

அமோனியம் சல்பேட்	6 அவுன்ஸ்	வீதம் இருமுறை உரமிட வேண்டும்
சூப்பர்	18 ,,	
பொட்டாசியம் சல்பேட்	8 ,,	

ஜூன்—ஜூலையில் ஒரு முறையும் நவம்பர்—டிசம்பரில் ஒரு முறையும் உரமிட வேண்டு.

அறுவடை பருவம்

குளிர் காலம் தவிர வருஷம் பூராவும் காய்க்கும்.

காய்க்கும் வருடம்

2-வது வருஷம்.

மகசூல்

ஒரு மரத்திற்கு 120-லிருந்து 150 பழங்கள்; எக்கருக்கு சுமார் 40,000—50,000 ராத்தல்.

(5) கொய்யா

மண் ..	.. வடிகால் வசதியுள்ள சிவப்பு வண்டல் நிலம்.
இனப்பெருக்க முறை	.. பதியம் நடுதல்
நடவுச் செடியின் வயது	.. ஒரு வருஷம் 3 மாதம்.
நடும் பருவம்	.. ஜூன் முதல் டிசம்பர் வரை.
குழி அளவு	.. 2 கன அடி
இடைவெளி	.. 25′×25′

எக்கருக்கு 75 செடிகள்

உரமிடுதல்

ஒரு மாதத்திற்கு ஒரு முறைக்கு:

மாட்டெரு	.. 100 ராத்தல்
அமோனியம் சல்பேட்	.. 1 ,,
சூப்பர் ..	.. 2 ,,
மியூரியேட் ஆஃப் பொட்டாஷ்	.. 1 ,,

வருஷத்தில் ஜூன் மாதம் ஒரு முறையும் நவம்பர்—டிசம்பரில் ஒரு முறையும் உரமிட வேண்டும்.

அறுவடை பருவம்

பிப்ரவரி, ஜூன், அக்டோபர் மாதங்களில் பூத்து வருடம் பூராவும் பழம் தருகிறது. பூத்து 5-வது மாதத்தில் பழமாகும்.

காய்க்கும் வருடம்

நட்டு 3 அல்லது 4 வருஷத்தில் பலன் தரும். பின் வருஷம் பூராவும் பலன் தரும். 8 முதல் 30 வருஷம் வரை நல்ல மகசூல்.

மகசூல்—ஒரு மரத்திற்கு 300 முதல் 500 பழங்கள்.

(6) சப்போட்டா

மண் .. .. மணற் பாங்கான வண்டல் சிறந்தது.
இனப்பெருக்க முறை .. ஒட்டுச் செடி நடுதல்
நடவுச் செடியின் வயது .. 2 வருடம்
நடும் பருவம் .. ஜூன் முதம் டிசம்பர் வரை
குழி அளவு .. 3 கன அடி
இடைவெளி .. 30′ × 30′

எக்கருக்கு 48 செடிகள்.

உரமிடுதல்

கொய்யாவுக்குக் கொடுத்துள்ள அளவே.

அறுவடை பருவம் .. மார்ச்—ஏப்ரல் ; செப்டம்பர்—அக்டோபர்.
காய்க்கும் வருடம் .. 4-வது வருடம்
8-வது வருடம் அதிக மகசூல்.
மகசூல் .. .. ஒரு மரத்திற்கு 1,000 முதல் 2,000 பழங்கள் வரை.

(7) பலா

மண் .. .. எவ்வித நிலத்திலும் வரும். வடிகால் வசதி இல்லாவிட்டால் இறந்து விடும்.
இனப் பெருக்க முறை விதை, ஒட்டுச் செடிகள் நடுதல்.
நடவுச் செடியின் வயது ஒரு வருஷம்
நடும் பருவம் ஜூன் முதல் டிசம்பர் வரை.
குழி அளவு 2 கன அடி.
இடைவெளி 40′ × 40′
எக்கருக்கு 27 செடிகள்.

உரமிடுதல்

மாட்டெரு .. 20 ராத்துல
அமோனியம் சல்பேட் 4—5 ராத்தல்.
சூப்பர் .. 5—10 ராத்தல்.
அறுவடை பருவம் .. ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை.
காய்க்கும் வருடம் .. 6 முதல் 10 வருடங்களில் பலன் தரும்.
ஒட்டு மரங்கள் 3 முதல் 5 வருடங்களில் பலன் தரும்.
மகசூல் .. .. .. ஒரு மரத்திற்கு 250 பழங்கள் வரை.
ஒவ்வொரு பழமும் 20 முதல் 80 ராத்தல் எடை வரும்.

சிங்கப்பூர் பலா ஒரு கார் காய்ப்பு ரகம். 3½ வருடங்களில் காய்ப்புக்கு வரும். வேலிப்பலா அதிக மகசூலும் உயர்ந்த ரக பழங்களும் கொடுக்கக்கூடிய ரகம்.

(8) திராட்சை

மண் .. .. .. வடிகால் வசதியுள்ள நிலம் ஆழமுள்ள வண்டல் நிலம் மிகச் சிறந்தது.
இனப்பெருக்க முறை .. வேரூன்றிய போத்துக்களை நடுதல்.
நடவுச் செடியின் வயது .. 6 முதந் 12 மாதம்.
நடும் பருவம் ஜூன் முதல் ஜனவரி வரை.
குழி அளவு .. .. 3 கன அடி
இடைவெளி .. .. 20′ × 20′
எக்கருக்கு 110 செடிகள்.

உரமிடுதல்

வளர்ந்த கொடிகளுக்கு ஒரு வருஷத்திற்கு இருமுறைகள் கீழ்க்கண்ட உரங்களை இடவும். ஒவ்வொரு முறையும் கவாத்து செய்து ஒன்று அல்லது இரு தினங்களில் உரமிடவும்.

உரம்.	ராத்தல்.
பசுந்தழை உரம்	500
மாட்டெரு	500
பொட்டாசியம் சல்பேட்	10
சூப்பர்	10
எலும்புத்தூள்	10
மியூரியேட் ஆஃப் பொட்டாஷ்	4

பழங்களுக்கு அதிக இனிப்புக் கொடுக்க கொடிக்கு மேலும் 3 ராத்தல் வீதம் மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் உரத்தை அறுவடைக்கு ஒரு மாதத்திற்கு முன் போடவும்.

அறுவடை பருவம் ..டிசம்பர்—ஜனவரியிலும், மே—ஜூனிலும் கவாத்து செய்தால் மார்ச்—ஏப்ரலிலும், செப்டம்பர், அக்டோபரிலும் மகசூல் கிடைக்கும்.
காய்க்கும் வருடம் .. 1½ வருஷத்தில்
மகசூல் .. ஒரு எக்கருக்கு 20,000 ராத்தல். 5 வருஷத்திற்குப் பிறகு மகசூல் அதிகரித்து 20 வருஷங்கள் வரை நல்ல மகசூல் தரும்.
ஷரா .. .. .. அடிக்கடி போர்டோக் கலவை தெளிக்க வேண்டும். பற்று நரம்புகளை நீக்க வேண்டும்.
மண்

(9) அன்னாசி

மண் .. .. நல்ல இளக்கமான மண் செம்புறை நிலங்களிலும் வருகிறது.
இனப்பெருக்க முறை கன்றுகள் நடுதல்
நடும் பருவம் .. ஜூலை முதல் டிசம்பர் வரை.
பாருக்கு பார் இடைவெளி 5′—6′
செடிக்குச் செடி 2′—6′
உரம் .. .. எக்கருக்கு 25 வண்டி மாட்டெரு.
அறுவடை பருவம் பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை பூத்து ஜூலை முதல் செப்டம்பர் வரை பழங்கள் கிடைக்கும்.
காய்க்கும் வருடம் 12 முதல் 18 மாதங்களில் காய்க்கும். அதிலிருந்து 3 வருடங்கள் பலன் தரும்.
மகசூல் .. .. வருஷத்திற்கு ஒரு செடிக்கு 20 முதல் 30 ராத்தல் வரை. (5 அல்லது 6 பழங்கள்)
தனிப் பயிராகவும் ஊடு பயிராகவும் பயிர் செய்யலாம்.

(10) முந்திரி

மண்	தரிசு நிலங்களிலும் மணற்பாங்கான பூமி களிலும் அதிக கவனிப் பின்றி வரும். களரற்ற வண்டல் கலந்த செம் மண் பூமி சிறந்தது.
இனப்பெருக்க முறை	வானப் பதியம், விதை.

வருஷந்தோறும் தவறாமல் நன்றாகக் காய்க்கும். மரங்களிலிருந்து நடுத்தரப் பருமனுடைய அல்லது பெரிய கொட்டைகளை விதைக்குத் தேர்ந்தெடுக்கவும்.

நடவுச் செடியின் வயது	6 மாத வானப்பதியன்.
நடும் பருவம் ..	ஜூலை முதல் ஆகஸ்ட் வரை.
குழி அளவு ..	1½ கன அடி
இடைவெளி ..	24′×24′

ஏக்கருக்கு 75 செடிகள்.

உரமிடுதல் ..	குப்பை உரம் போடுவது நல்லது.

அதிக மகசூலுக்கு ஒரு செடிக்கு	அமோனியம் சல்பேட்	1 ராத்தல்
	எலும்புத்தூள்	1 ராத்தல்
	சாம்பல்	10 ராத்தல் வீதம் கலந்து போடலாம்.

(11) மாதுளை

மண்	எவ்வித நிலத்திலும் வரும். களிமண் நிறைந்த வண்டல் பூமி மிகச் சிறந்தது.
இனப்பெருக்க முறை	விதை, போத்துகள்.
நடவுச் செடியின் வயது	ஒரு வருடம்
நடும் பருவம் ...	ஜூலை முதல் டிசம்பர் வரை.
குழி அளவு ..	1½ கன அடி
இடைவெளி ..	15′×15′

ஏக்கருக்கு 200 செடிகள்.

உரமிடுதல்

கொய்யாவுக்குக் கூறியது போலவே.

அறுவடை பருவம்	வருடம் பூராவும் காய்க்கும். ஜூன் மாதம் அதிக மகசூல்
காய்க்கும் வருடம்	போத்துகள் 1 வருடம். விதை 2½ வருடம்.
மகசூல் ..	ஒரு வருஷத்திற்கு ஒரு மரத்திற்கு 50 முதல் 150 பழங்கள்.
ஒவ்வொரு வருஷமும் முந்திய வருஷம் உண்டான கொப்புகளைச் சிறுகக் கவாத்து செய்ய வேண்டும்.	..

(12) அத்தி

மண்	இறுகின பூமி அல்லது நடுத்தர இளக்கமான பூமி.
இனப்பெருக்க முறை	சாதாரணமாகப் போத்து களே உபயோகிக்கப்படு கின்றன.
நடவுச் செடி வயது	ஒரு வருடம்.
நடும் பருவம் ..	ஜூலை முதல் டிசம்பர் வரை.
குழி அளவு ..	1½ கனஅடி.
இடைவெளி ..	10′×10′

ஏக்கருக்கு 436 செடிகள்.

உரமிடுதல்

அடியுரமாக தொழு உரம் 25 ராத்தல்.

அமோனியம் சல்பேட்	1 ராத்தல்	இவைகளை ஒவ்வொரு வருஷமும் ஜூன் மாதம் ஒரு முறையும் டிசம்பரில் ஒரு முறையும் இடவும்
சூப்பர்	2 ராத்தல்	
மியூரியேட் ஆஃப் பொட்டாஷ்	1 ராத்தல்	

(13) சீதாபழம்

மண்	பாறை நிலங்களிலும் வளர்ந்து பலன் தரக் கூடியது.
இனப்பெருக்க முறை	விதை, ஒட்டுச்செடி, வான் பதியம் நடுதல்.
நடவுச் செடி வயது	ஒரு வருஷம்
நடும் பருவம் ..	ஜூலை முதல் டிசம்பர் வரை.
குழி அளவு ..	1½ கனஅடி
இடைவெளி ..	15′×15′

ஏக்கருக்கு 200 செடிகள்

உரமிடுதல் ..	சப்போட்டாவுக்குக் குறித்தபடியே.
அறுவடை பருவம்..	ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரை.
காய்க்கும் வருடம் ..	விதை 3 அல்லது 4 வருடம்; ஒட்டு 2 வருடம்
மகசூல் ..	ஒரு மரத்திற்கு 100 பழங் கள். (60 முதல் 70 ராத்தல்)

Phone : 24558, 34251, 63746.

Grams : 'VENPALCO'

விவசாய பெருமக்களுக்கு வேண்டுகோள்

குறைந்த உழைப்பில்
நிறைந்த லாபத்தை
உழவர்களுக்கு தருவது

கஜலக்ஷ்மி கலப்பு உரமும்

ராமன்ஸ் நவீன விவசாயக் கருவிகளும்

தயாரிப்பாளர் :

வி. வேணுகோபால் பிள்ளை & கோ.

ராமன்ஸ் எஞ்ஜினியரிங் ஒர்க்ஸ்

தலைமை ஆபீஸ் :

நெ. 2/27, பிராட்வே, சென்னை-1

கிளைகள் :

1. நெ. 36, ஆசூரித் தெரு, திருவள்ளூர்
2. நெ. 14-F, பழைய பண்ருட்டி சாலை, விழுப்புரம்
3. நெ. 55, ஹபீப் பஜார், ரெட்டியில்ஸ், சென்னை-52.

மற்றும் எல்லா ஊர்களிலும் உள்ள எங்கள் ஏஜெண்டுகளிடமும் கிடைக்கும்.

ஒருமுறை உபயோகித்தால் சிறப்பு தெரியும்

விற்பனை ஏஜெண்டுகள் தேவை

தஞ்சை மாவட்டத்தில் பிந்திய தாளடிப் பட்டத்திற்கு ஏ.எஸ்.டி. 5 (கார்த்திகை சம்பா)

(அ. சுப்பிரமணியன், அஸிஸ்டண்ட், பிராந்திய ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை.)

தஞ்சை மாவட்டத்தில் நெற்பயிரிடுங் காலங்கள் மூன்று. குறுவை, சம்பா, தாளடி பட்டங்களாகும். குறுவைப் பட்டத்தில் ஏ.டி.டீ. 3 (குறுவை), ஏ.டி.டீ. 20 (குறுவை சிறுமணி) டி.கே.எம். 6 (சொர்ணவாரி) போன்ற ரகங்களையும் சம்பா பட்டத்தில் ஏ.டி.டீ. 1 (சிகப்புச் சிறுமணி) ஏ.டி.டீ. 10 (குரங்கு சம்பா) கோ. 25 (குலைநோய் தாக்காத சம்பா) போன்ற ரகங்களையும், தாளடிப்பட்டத்தில் ஏ.டி.டீ. 8 (ஒட்டுச் சிறுமணி) ரகத்தையும், பெருவாரியாகப் பயிரிடுகின்றனர். தண்ணீர் வசதி கிடைக்கும் இடங்களில் கோ. 25-ஐ தாளடிப்பட்டத்திலும் பயிரிடுகின்றனர். பெரும்பாலும் தண்ணீர் வசதியைப் பொறுத்தும் பட்டங்களைப் பொறுத்துந்தான் பயிரிடும் நெல் ரகங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. ஆனல் மழையின் காரணமாக குறுவை அறுப்பு தாமதித்துவிடினும், தாளடி நடவு பிந்தி நடவேண்டிய நிலை ஏற்படினும் பாசன நீர் பிந்திவிடினும் அல்லது முந்தியே நிறுத்தப்படினும் அதிக வயதையுடைய காரணத்தினல் தாளடிப்பட்டத்தில் கோ. 25 பயிரிடமுடிவதில்லை. ஏ.டி.டீ. 8 பயிராயினும் திருப்திகரமான மகசூல் கொடுப்பதில்லை. ஆகவே இவ்வாருன காலங்களில் மாற்று ரகங்கள் அவசியமாகின்றன.

ஏ.எஸ்.டி. 5 (கார்த்திகை சம்பா) என்ற ரகம் அம்பா சமுத்திரம் நெல் ஆராய்ச்சிப்பண்ணையிலிருந்து வெளியிடப்பட்டதாகும். இந்த ரகத்திற்கு வயது 135—140 நாட்களாகும். நெல் வெள்ளை. அந்த ரகத்தை திருநெல்வேலி ஜில்லாவில் பாசனத்தில் இரண்டாம் போக பயிருக்கு பயிரிட்டு நல்ல மகசூல் அடைகின்றனர். இந்த ரகத்தை 1959-60-ம் ஆண்டு விதைப் பெருக்கத்திற்கென சுமார் 1·25 ஏக்கர் அளவில் விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில் தாளடிப்பட்டத்தில் பயிரிடப்பட்டது. பயிர் செழித்து பார்வைக்கு நன்ருக இருந்தது. அதே தேதியில் விதைத்துப் பயிரிட்டு அறுவடைசெய்த ஏ.டி.டீ. 8 (ஒட்டு சிறுமணி) ரகத்தை விட 12 சதவிகித மகசூல் அதிகமாகவே கொடுத்தது. அந்த ரகம் தொடர்ந்து தாளடிப் பட்டத்திலும் பிந்திய தாளடிப்பட்டத்திலும் விதை அபிவிருத்திக்கென பயிரிடப்பட்டது. இந்த ஐந்து ஆண்டுகளிலுமே இந்த ரகம் பெருவாரியாக தாளடிப் பட்டத்தில் பயிரிடப்படும் ஏ.டி.டீ. 8-ஐ விட நல்ல மகசூல் கொடுத்துள்ளது.

ஏ.எஸ்.டி. 5, ஏ.டி.டீ. 8 ஐவிட 10·6 சதவிகிதத்திலிருந்து 54 சதவிகிதம் வரையிலும், சராசரிக்கு 21·4 சத விகிதமும் அதிகமாக மகசூல் கொடுத்திருக்கிறது. மேலும் இந்த ரகம் தாளடிப்பட்டத்தில் பிந்தி நடவு நட்டு இருக்கும் காலங்களிலும் ஏ.டி.டீ. 8-ஐ விட நல்ல மகசூல் கொடுத்துள்ளது. ஆகவே பிந்தி நடவிலும் நல்ல மகசூல் கொடுக்கவல்லது என்பது இந்த ரகத்திற்கு ஓர் தனிச் சிறப்பாகும்.

இந்த ரகத்தை இதே அளவு வயதுகொண்ட மற்ற ரகங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் நோக்கத்துடன் பிராந்திய ஆராய்ச்சிப் பண்ணையில் 1963-64-ம் ஆண்டு தாளடிப்பட்டத்

[24-ம் பக்கம் பார்க்கவும்]

உங்கள் நெற்பயிருக்கு

பொட்டாஷ்

K_2O

(நைட்ரஜன்
பாஸ்பரிக்
அமிலத்துடன்)
உபயோகியுங்கள்

பொட்டாஷ் உங்கள் நெற் பயிரின்
உரத்தையும், தரத்தையும் உயர்த்துகிறது
பொட்டாஷ் சிகப்பாகாமல் தடுக்கும்.
பொட்டாஷ் நோய் நொடிகளை எதிர்த்து
நிற்க வலுவூட்டுகிறது.
பொட்டாஷ் பதரைக் குறைத்து,
பயிர் விளைச்சலைப் பெரிதும்
அதிகரிக்கிறது.

சகஜமான
எருவுடன் ஏக்கராவுக்கு
25 கிலோ வரை
பொட்டாஷ் ம்யூரியேட்
உபயோகியுங்கள்.

பொட்டாஷ்
மலிவானது - 25 கிலோ
பொட்டாஷ் ம்யூரியேட்
விலை 8 ரூபாய்க்கும்
குறைவானது.
பொட்டாஷ்
உபயோகியுங்கள்.
அதிக வருமானம்
பெறுங்கள்.

உங்கள் உர வியாபாரியிடம்
கேட்கவும். அல்லது
இந்த முகவரிக்கு எழுதவும்:

இந்தியன் பொட்டாஷ் சப்ளை ஏஜென்ஸி லிமிடெட்

8/9, தம்பு செட்டித் தெரு. த. பெ. நெ. 14, சென்னை-1

IPG 2, TMo

கருங்கண்ணிப் பருத்தி ஆராய்ச்சியின் சாதனைகள்

(சி. கே. ராமச்சந்திரன், ஆர். எஸ். அன்னப்பன், டி. எஸ். ஏரன்)

சென்னை ராஜ்யத்தில் சுமார் 12 லட்சம் ஏக்கர் நிலத்தில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. இதில் சுமார் 6·5 லட்சம் ஏக்கர் மானாவாரி நாட்டுப் (Desi cotton) பருத்தியாகும். முக்கியமாக திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்களிலும், கோயம்புத்தூர் ஜில்லாவின் சில பாகங்களிலும் கருங்கண்ணிப் பருத்தி மானாவாரியாக பெரும்பாலும் கரிசல் நிலங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. இவ்விடங்களில் இப் பருத்தி ஒரு முக்கியத்துவம் பெற்று விவசாயிகளுக்கு மட்டுமேயல்லாமல் மில் தொழிற் சாலைகளிலிருப்பவர்களுக்கும் வாழ்க்கையளிப்பதாக இருக்கிறது.

ஆராய்ச்சியின் மூலமாக கருங்கண்ணிப் பருத்தியின் மகசூலும் மற்றும் பஞ்சின் தன்மைகளும் பன்மடங்கு அதிகம் ஆக்கப்பட்டிருக்கின்றது. கோவில்பட்டி விவசாயப் பண்ணையில் 1901-ம் வருடம் முதல் கருங்கண்ணிப் பருத்தி ஆராய்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. முதன் முதலாக 50 ரகப் பருத்திகள், மற்ற மாநிலங்களிலிருந்தும், அமெரிக்கன் பருத்தி உட்பட சாகுபடி செய்து பார்க்கப்பட்டது. ஆனால் இவைகளில் ஒன்றும் சிறப்பாக விளங்கவில்லை. கருங்கண்ணியும் உப்பமும் கலந்த "டின்னிஸ்" என்ற கலப்புப் பருத்தி பயிரிடப்பட்டது, இவ்விரண்டில் கருங்கண்ணிப் பருத்தி சிறந்ததாக இருந்தது. ஆகவே கருங்கண்ணிப் பருத்தியில் சிறந்த குணங்கள் உள்ளவைகளை தனிச் செடிகளில் இருந்தும் (Single plane selection) அதிகமான செடிகளில் இருந்தும் (Mass selection) தேர்ந்தெடுக்கப்பட்டன. இதில் உடனே அதிக பயன் தோன்றினாலும் விரைவில் குறைவு ஏற்பட்டது. ஆகையால் ஒட்டுமுறை (Hybridistion) கையாளப்பட்டது. இதில் உப்பமும் கருங்கண்ணியும் பலவகைகளில் ஒட்டுச் சேர்க்கப்பட்டது. கருங்கண்ணியும், கருங்கண்ணியும் பலவகைகளில் ஒட்டுச் சேர்ப்பதில் அதிக பலனளிப்பதாக விளங்கியது. இதில் செடியின் வளர்ப்புத் தன்மையை முன்னிட்டு தரம் 'ஏ', 'பி', 'ஸி', 'டி' என்று நான்கு தரமாகப் பிரிக்கப்பட்டது. இவைகளில் இருந்து 1912–13 வருடங்களில் ஸி-2 என்ற பருத்தியும் 1914–15 வருடங்களில் ஸி–3 என்ற பருத்தியும் வெளியிடப்பட்டது. ஸி-3 என்ற வகை அதிக பஞ்சடக்கம் உள்ளதாக விளங்கியது. இன்னும் 1924–25 வருடங்களில் ஆராய்ச்சியின் பயனாக ஏ–4, ஏ–5, ஏ–8, ஏ–10, ஸி–4, ஸி–5, ஸி–6, ஸி–7, ஸி–8 என்ற ரகங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டன. இவைகளில் ஸி–7, ஏ–10 அதிக சிறப்புள்ளதாக இருந்ததால் 1925–26 வருடம் விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டது. ஸி-7 என்ற ரகம் நல்ல கரிசல் பூமிக்கும் ஏ–10 என்ற ரகம் சிறிது மணற்பாங்கான இடங்களுக்கும் தகுதியுள்ளவைபாக சிறப்புற்று விளங்கின.

ஸி-7, ஏ-10 பருத்திகளின் விவசாயம் குறையவே இன்னும் அதிகமாக ஆராய்ச்சி செய்யப்பட்டது. எல்லா மண் தரைகளிலும் பயிர் செய்யக்கூடிய பருத்தி வகையைக் குறிக்கோளாகக் கொண்டு ஆராய்ச்சி செய்யப்பட்டது. இதன் பயனாக 1934–35 வருடங்களில் ஸி–7 தரத்திலிருந்து எண் 2622 என்ற வகை தேர்ந்து எடுக்கப்பட்டு கருங்கண்ணி-1 என்று பெயர் பெற்று விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டது. இப் பருத்தி அதிக விசேஷமாகப் பரவி 1942–45 வருஷங்களில் 2·7 லட்சம் ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டது. ஆனால் ஜனவரி பிப்ரவரி மாதங்களில் பெய்யும் மழையினால் அதிகமாகப் பூக்களும் காய்களும் விழவே இப் பருத்தி சாகுபடியின் முன்னேற்றம் குறைய ஆரம்பித்தது.

கருங்கண்ணி-1ல் இருந்து தேர்ந்துஎடுத்தல் (resellection) அதிகப் பயனளிக்காததால் திரும்பவும் ஒட்டு சேர்ப்பு முறை (hybridisation) கையாளப்பட்டது. பல இனங்களில் ஒட்டு சேர்ப்பு செய்யப்பட்டது. இவைகளில் இருந்து 4706 என்ற வகை எண் 32/13 என்ற நம்பரில் இருந்து 1936–37 வருடங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டது (an inter racial hybrid between indicem and cernuum) இது கருங்கண்ணி-2 என்று பெயரிடப்பட்டு 1947–48ம் வருடம் விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டது. இதே சமயத்தில் கோயம்புத்தூரில் கருங்கண்ணி-5 உண்டாக்கப்பட்டு 1944–45 வருடம் பொது விவசாயத்திற்கு அளிக்கப்பட்டது. கருங்கண்ணி-2 திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்களுக்கு ஏற்றதாகவும் கருங்கண்ணி–5 கோயம்புத்தூர் ஜில்லா, சேலம் ஜில்லாவின் சில பகுதிகளுக்கு ஏற்றதாகவும் இருந்தது. இவைகள் 7/8 அங்குலம் இழை நீளமும், 27-ம் நம்பர் நூற்புத்தன்மையும், ஏக்கருக்கு 100 ராத்தல் பஞ்சும் கொடுக்கும் குணங்கள் உள்ளவைகள்.

1949-ம் வருடம் "கருங்கண்ணி அபிவிருத்தித் திட்டம்" என்ற திட்டத்தின் கீழ் ஆராய்ச்சி ஆரம்பம் ஆகியது. இத் திட்டத்தின் ஆராய்ச்சியின் பயனாக கருங்கண்ணி-6 உருவாக்கப்பட்டது. இது 52-2 1523 ஆர் (இண்டிக்கம் × ஸிருநுவம்) என்றவைகளால் ஒட்டு செய்யப்பட்டது. இந்தப் புதிய கருங்கண்ணி-6 பருத்தியின் தன்மைகளாவன.

1 இழை நீளம் 1" (ஒரு அங்குலம்.)

2 பஞ்சடக்கம் சதவீதம் 33

3 நூற்புத்தன்மை 33-ம் நம்பர் நூல்

4 பஞ்சு மகசூல் ஏக்கர் ஒன்றுக்கு 125 ராத்தல்

கருங்கண்ணி-6 பருத்தியைச் சாகுபடி செய்வதால் ஏக்கர் ஒன்றுக்கு சுமார் ரூ. 40/- (நாற்பது ரூபாய்) அதிக லாபம் கிடைக்கும். இப் பருத்தி கருங்கண்ணி-2, கருங்கண்ணி-5 (கே-2, கே-5) இவைகள் சாகுபடியாகும் எல்லா மாவட்டங்களிலும் பயிரிடக்கூடியது. கே. 6 ரகம் 1957-ம் வருடம் விவசாய இலாகாவால் பொதுவாக பயிரிட விவசாயிகளுக்கு வினியோகித்து சிறப்பாக பல இடங்களில் தற்போது பயிரிடப்பட்டு வருகிறது. கருங்கண்ணி பருத்தியின்

ஆராய்ச்சியின் பலனாக அதிக சிறந்த பருத்தி ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் சுதேசி (Desi Cotton) பருத்தி ஆராய்ச்சியின் முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

வருடம். (1)	பருத்தி இரகங்கள். (2)	பஞ்சு மகசூல் (ராத்தல்.) (3)	அரைவை சதவீதம். (4)	இழை நீளம் (அங்குலம்.) (5)	நூற்புத் தன்மை. (6)	இலாபம் ஒரு ஏக்கருக்கு (7)
			ஆராய்ச்சிக்கு முன்			
1900	நாடம்	20	25	0·75	10' எஸ்	
	உப்பம்	65	28	0·77	14' எஸ்	
	கருங்கண்ணி	85	30	0·84	26' எஸ்	
			ஆராய்ச்சிக்கு பின்			
1925–26	ஸி-7	110	30	0·85	27' எஸ்	ரூ. 10
1934-35	கே. 1	110	30	0·82	23' எஸ்	ரூ. 20
1944-45	கே. 5	120	30	0·89	28' எஸ்	ரூ. 31
1947–48	கே. 2	120	32	0·87	28' எஸ்	ரூ. 24
1957–58	கே. 6	125	33	1·00	33' எஸ்	ரூ. 40

கே. 6 பருத்தி விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டவுடன் இத்திட்டத்தின் குறிக்கோள் இன்னும் சிறப்புள்ள பருத்தியை உருவாக்கும் நோக்கத்துடன் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டது.

1. இழை நீளம் 1.03 அங்குலத்திற்கு குறையாமலிருக்க வேண்டும்.

2. 33 சதவீதத்திற்கு குறையாமல் பஞ்சடக்கம் இருக்க வேண்டும்.

3. 40' எஸ் நம்பர் நூல் நூற்கும் தன்மை வேண்டும்.

4. ஏக்கருக்கு 125 ராத்தல் பஞ்சு மகசூல் தர வேண்டும்.

இவைகளை நோக்கமாகக் கொண்டு தொடர்ந்து செய்த ஆராய்ச்சியின் பயனாக அநேக சிறந்த பண்புகள் உள்ள பருத்தி ரகங்கள் பல பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. 9833-4 என்ற சிறந்த குணங்கள் உள்ள பருத்தி ரகமும், 9978-பி-5 என்ற அதிக மகசூல் தரக்கூடிய இரகமும் ஜில்லாக்களில் பல பாகங்களிலும் விவசாயிகளின் நிலங்களில் விவசாயிகளால் பயிரிடப்பட்டு இத்திட்டத்தின் கீழ் பரிசோதிக்கப்பட்டு வருகிறது. இவ்விரண்டு பருத்தி வகைகளின் பண்புகள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

	தரம் பற்றிய குறிப்பு. (1)	9833-4 (2)	9978-பி-5 (3)
1	பருத்தி மகசூல் (கிலோகிராம்/ஹெக்டர்)	429	594
2	பஞ்சு மகசூல் (கிலோ கிராம்/ஹெக்டர்)	153	212
3	பஞ்சடக்கம் சதவீதம்	35·7	35·6
4	இழை நீளம் (அங்குலம்)	1·05	1·03
5	நூற்கும் நூலின் தரம்	37'எஸ்	33'எஸ்

கருங்கண்ணித் திட்டத்தின் ஆராய்ச்சியின் பயனாக பரிசோதனைகளிலிருக்கும் சிறந்த குணங்கள் கொண்ட பல கருங்கண்ணிப் பருத்தி ரகங்கள்.

எண். (1)	இரகத்தின் பெயர். (2)	பருத்தி மகசூல் (ஏக்கருக்கு ராத்தல்.) (3)	இழை நீளம் (அங்குலம்.) (4)	பஞ்சடக்கம் (சதவீதம்.) (5)	இழையின் மென்மை (10^{-6} அவுன்ஸ்/அங்குலம்.) (6)	இழையின் வலிமை lb/mgm (7)	நூற்கும் தன்மை (Count strength product.) (8)
			நீண்ட இழை ரகங்கள்.				
1	0687	242	1·05	35·3	0·208	9·31	..
2	04 8-சு	400	1·08	37·7	0·183	9·39	1434
3	0832	346	1·11	35·3	0·169	8·36	..
4	0896	248	1·10	35·3	0·159	8·85	..
			மென்மையும் நூற்புத்திறனும் உள்ள ரகங்கள்.				
5	0360-எம்	303	1·04	38.0	0·159	9·28	1667
6	0420	222	1·01	38·5	0·151	9·21	1799
			வலிமையான இழைகள் உள்ள ரகங்கள்.				
7	0351 டி.டி.	130	0·99	36·0	0·195	10·04	..
8	0829	213	1·04	35 5	0·171	9·94	..
9	0408 டிஈ	184	1·05	35·3	0·228	9·74	..
10	0404 பிஸி	204	1·04	37·0	0·218	9·54	..

நல்ல பலன் தரக்கூடிய பல சிறந்த குணங்கள் அமைந்த கருங்கண்ணிப் பருத்தி ரகங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

உரப் பிரச்னை தீர்க்கும் பசுந்தாள் உரங்கள்

(வி. ஆதிகேசவன்—எஸ். இராமமூர்த்தி, விரிவினைப் பிரிவு, கோவை.)

விவசாய உற்பத்தியை அதிகரிக்கக் காரணமாக இருக்கும் பற்பல அம்சங்களுள், உரமிடுவதுதான் மிகவும் முக்கியமான அம்சம் என்று துணிந்து கூறலாம். போதுமான அளவு கரிம உரங்கள், அதிலும் முக்கியமாகக் கரிம எருக்கள் கிடைப்பது எங்கும் பிரச்சனையாக இருக்கிறது. தொழு உரம், கம்போஸ்ட் போன்ற கரிம உரங்கள் ஒவ்வொரு விவசாயியிடமும் குறிப்பிட்ட அளவுதான் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கும். விவசாயியின் முழுத் தேவைகளையும் இந்த உரங்கள் பூர்த்தி செய்யாது; அதனால் விவசாயி கரிம உரங்களுக்காக இவற்றை மட்டுமே நம்பியிருக்கமுடியாது. இதற்கான ஒரே வழி பசுந்தாளுரங்களை வளர்ப்பதுதான்.

ஆனால், உரச் சத்து அளவை எடுத்துக்கொண்டால் செயற்கை உரங்களிலுள்ள சத்தின் மதிப்பு ஓரளவு மலிவாக இருக்கிறதே, அதனால் கரிம உரங்களுக்குப் பதிலாக இவற்றை மட்டுமே (செயற்கை உரங்கள்) போட்டால் போதுமே என்று சிலர் எண்ணக்கூடும். ஆனால் மண்வாழ் உயிரினங்களின் வளர்ச்சிக்கும், மண்ணின் கூட்டமைப்புக்கும், சரியான வடிகால் வசதிக்கும், குறிப்பிட்ட அளவு இலை மக்கு (Humus), மண்ணில் இருப்பது மிகவும் அத்தியாவசியமாகும். மேலும், செயற்கை உரங்கள் ஒரு குறிப்பிட்ட பயிருணவை மட்டுமே கொடுக்கக்கூடியது. செம்மையான பயிர் வளர்ச்சிக்கு, செயற்கை உரங்கள் அளிக்கக்கூடிய முக்கிய ஊட்டங்களோடுகூட சிறு அளவுகளில் சிறு மூலகங்களும் மிகவும் அவசியம். கரிம எருக்களில் இவைகளும் இருக்கின்றதாகையால், இவற்றை நிலத்திற்கு இடுவது தவிர்க்க முடியாதென்றே கூறலாம்.

பசுந்தாள் உரமிடல்

பசுந்தாளுரப் பயிரை நிலத்தில் வளர்த்து அதை அப்படியே நிலத்தில் உழுதுவிடுவதைத்தான் பசுந்தாள் உரமிடல் என்று கூறுகிறோம். சாகுபடி செய்யப்படும் எல்லா நிலங்களின் உரத் தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய பெரும் வாய்ப்புக்கள் பசுந்தாள் உரத்திற்கு மட்டுமே இருக்கிறது என்று சொல்லலாம்.

பசுந்தாளுரத்தை நிலத்திலிட்டு உழுதுவிடும்பொழுது, அவற்றின் சிதைவிற்கும், ஊட்டங்களை முக்கியப் பயிருக்கு அளிப்பதற்கும் அதிக தண்ணீர்தேவைப்படுகிறது. ஆகையால் பாசன வசதியுள்ள இடங்களுக்கும், அதிலும் குறிப்பாக நஞ்சை நிலங்களுக்கும் பசுந்தாள் உரமிடும் வழக்கத்தை மிகவும் பயனளிக்கவல்லவாறு கடைப்பிடிக்கலாம். இதன் காரணமாகத்தான், நஞ்சை, தோட்டக்கால், புஞ்சை வகை நிலங்களையுடைய விவசாயிகள் கங்கள் நஞ்சை நிலங்களுக்குப் பசுந்தாளுரத்தைமட்டுமே தவறாமல் இட்டு, தோட்டக்கால், புஞ்சை நிலங்களுக்குத் தொழு உரத்தையும், கம்போஸ்டையும் உபயோகிப்பது சிறந்த முறையாகும். இத்துடன், விளைவிக்கும் பயிரைப் பொறுத்துப் போதுமான செயற்கை உரங்களையும் இட வேண்டும்.

பசுந்தாள் உரமிடுவதன் நோக்கம்

பசுந்தாள் உரமிடுவதன் முக்கியமான நோக்கம், (1) மண்ணிலுள்ள நைட்ரஜன் (தழைச் சத்து) அளவைச் அதிகரிக்கச் செய்வது, (2) மண்ணில் "இலை மக்கு" அளவைக் கூட்டுவது.

பசுந்தாள் உரத்தினால் கிடைக்கும் நன்மைகள், அது நிலத்தில் உழுதுவிடப்படும்பொழுது அது அடைந்துள்ள வயதைப் பொறுத்திருக்கிறது. ஆகையால் பசுந்தாள் உரத்தின் முதிர்ச்சியைப் பொறுத்துத்தான், அதனால் ஏற்படும் பலன் இருக்கும். இளம் பயிர்கள் (பசுந்தாளுரப்பயிர்கள்) மண்ணுக்கு அதிக அளவில் தழைச் சத்தை அளிக்கிறது; வயது முதிர்ந்த பயிர்கள் மண்ணுக்கு அதிக அளவில் "இலை மக்கை" அளிக்கிறது. ஆதலால் பசுந்தாளுரப் பயிர் முதிர்வடைவதற்குமுன்பே நிலத்தில் இட்டு உழுதுவிடவேண்டும். காலதாமதம் ஆவது தவிர்க்கமுடியாதென்று தெரிந்தால் அவற்றை வெட்டி, கம்போஸ்டாக்கிப் பின்பு அடுத்த பயிருக்குப் போடலாம். "இலை மக்கு" குறைவாயுள்ள இறுக்கமான களிமண் நிலங்களுக்கு, முதிர்ச்சியடைந்த பசுந்தாளுரப் பயிர்கள் இவ்வது நல்ல பலனளிக்கும்.

எந்தப் பசுந்தாளுரப் பயிரை இடுவது ?

எல்லாச் சூழ்நிலைகளிலும், எல்லாப் பசுந்தாளுரப் பயிர்களும் நன்றாக வளருவதில்லை. ஒவ்வொரு விவசாயியும், தன் சூழ்நிலைகளுக்கேற்ற சரியான வகைப் பசுந்தாளுரப் பயிரைத் தேர்ந்தெடுப்பது மிகவும் முக்கியம். பசுந்தாளுரப் பயிரை உபயோகிப்பதில் ஏற்படும் வெற்றி, சரியான வகைப் பசுந்தாளுரப் பயிரைத் தேர்ந்தெடுப்பதில் தான் இருக்கிறது.

ஒரு பசுந்தாளுரப் பயிரைத் தேர்ந்தெடுப்பதில் மிகவும் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது, பசுந்தாளுரப் பயிரை வளர்ப்பதற்குக் கிட்டும் கால இடை வெளிதான். அதற்கு அடுத்து கவனிக்க வேண்டியவை, மண்ணின் வகை, கிடைக்கக்கூடிய ஈரம் முதலியவனவாகும்.

சென்னை மாநிலத்தின் முக்கியப் பசுந்தாளுரப்பயிர்கள்

நம் மாநிலத்தில் பசுந்தாளுரமிடும் வழக்கத்தை அறியும் பொருட்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பிலிருந்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள பசுந்தாளுரப் பயிர்கள் (பரப்பைப் பொருத்து வரிசைக் கிரமமாகத் தரப்பட்டுள்ளது) பயிரிடப்பட்டு வருகின்றன என்று தெரிகிறது.

1. கொளுஞ்சி
2. சணப்பு
3. தக்கைப்பூண்டு
4. பில்லிபெசரா-முதலியவை

விதையளவு

பசுந்தாளுரப் பயிர்களுக்கு உபயோகிக்கப்படும் விதை யளவு, அவை விதைக்காக வளர்க்கப்படுகின்றனவா அல்லது பசுந்தாளுரத்திற்காக வளர்க்கப்படுகிறதா என்பதைப் பொருத்து வேறுபடுகிறது. விதைக்காக உபயோகிக்கப்படுவதைக் காட்டிலும் ஏறத்தாழ இரு மடங்கு விதையளவு பசுந்தாள் உரத்திற்காக உபயோகிக்கப்படுவதில் தேவைப்படும். அதிக விதையளவு உபயோகிப்பதால், செடிகள் நெருக்கமாக இருப்பதுடன்; ஒவ்வொரு செடியும் பருத்து, கட்டையாகிவிடாமல் மெல்லியதாகவும், அதிக அளவு பசுந்தாளுரத்தைக் கொடுக்கக் கூடியதாகவும் இருக்கும்.

சில முக்கியமான பசுந்தாள் உரங்களைப் பற்றிய குறிப்புக்களும், அவற்றின் வயது; விதையளவு முதலியனவும் இங்கே தரப்பட்டுள்ளன:

	பசுந்தாளுரத்தின் பெயர்.	வயது.	இவைகளுக்கேற்ற கால இடைவெளி.	இவைகளுக்கேற்ற மண்.	விதையளவு. விதைக்காக (ஒரு ஏக்கருக்கு) (இராத்தலில்)	பசுந்தாள் உரத்திற்காக.	பொதுக் குறிப்பு.
	(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1.	கொளுஞ்சி	5 மாதங்கள்	3 மாதங்களுக்கும் மேலாக	மணற்குறு மண் (sandy loam)	20	30	நஞ்சை ஒரு போக நிலங்களுக்கேற்றது.
2.	சணப்பு	3 ,,	2 ,,	,,	40	40	இருபோக நிலங்களுக்கு ஏற்றது.
3.	தக்கைப் பூண்டு	3 ,,	2 ,,	களிக்குறு மண் clay loam)	20	40	இருபோக நிலங்களுக்கு ஏற்றது.
4.	பில்லி பெசரா	5 ,,	3 ,,	,,	6	12	ஒரு போக நிலங்களுக்கு ஏற்றது.
5.	செஸ்பேனியா	3 ,,	2 ,,	எல்லா மண்ணுக்கும் ஏற்றது.	15	40	இருபோக நிலங்களுக்கு ஏற்றது.

குறிப்பு: தக்கைப்பூண்டும், செஸ்பேனியாவும் களர் நிலங்களுக்கு ஏற்றவை.

விதைக்கும் காலம்.

நஞ்சைப் பூமிகளில் பசுந்தாளுரப் பயிர்கள் சாதாரணமாக கோடை காலத்தில் வளர்க்கப்படுகிறது; இந்த சமயத்தில் மண்ணின் ஈரப்பதம் குறைவாக இருக்கும். அதனால் விதைப்பதற்கான மண் பக்குவம் கிடைப்பது கஷ்டம். ஆகையால், பசுந்தாளுர விதைகளை, நெற்பயிர் நிலத்தில் இருக்கும் பொழுதே, அறுவடைக்கு முன்பாக, கடைசியாக நீர் வடிப்பதற்கு இரண்டல்லது மூன்று நாட்களுக்கு முன்பு விதைத்துவிட வேண்டும். (அ-து) அறுவடைக்கு 2–3 வாரங்களுக்கு முன்பாக; அப்பொழுதுதான் விதைகள் முளை விடுவதற்கு போதுமான ஈரம் நிலத்தில் இருக்கும். அந்தச் சமயத்தில் பொழியக்கூடிய கோடை மழையின் அநுகூலத்தையும் பெருவதற்கு வாய்ப்பிருக்கிறது. இவ்வாறுவளர்ந்த பசுந்தாளுரப் பயிர், எந்த நிலத்தில் விளைவிக்கப்பட்டதோ, அந்த நிலப்பரப்பிற்குப் போதுமான அளவு பசுந்தழையை எளிதாகக் கொடுக்கும்.

பசுந்தாளுரப்பயிரை அறுவடை செய்வது அல்லது உழுது விடுவதற்கான காலம்.

பசுந்தாளுரப் பயிரை அறுவடை செய்வதானாலும் சரி அல்லது மண்ணுடன் உழுது சேர்த்து விடுவதானாலும் சரி அது பூப்பதற்குத் தொடங்கிய உடனே செய்வது தான் மிகவும் சரியான தருணம். இந்தக் குறிப்பிட்ட தருணத்தில், பசுந்தாளுரப்பயிரை நேரடியாக நிலத்தில் சேர்த்து விடுவதற்கான வசதிகள் இல்லாமலிருந்தால், அதை அறுத்து சௌகரியமான அளவுகளில் நிலத்திலேயே குவியல்களாகப் போட்டு மேலே மண்ணையிட்டு, கம்போஸ்டாக்கி, பின்பு தண்ணீர் கிடைத்தவுடன், உபயோகித்துக் கொள்ளலாம்.

வாழையில தீவிர சாகுபடித் திட்டம்

வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் சில பஞ்சாயத்து யூனியன்களில் வாழையில் தீவிர சாகுபடித் திட்டத்தை (package programme) 1964–65, 1965–66 ஆகிய 2 வருடங்கள் அமுல் நடத்த தமிழ்நாடு அரசாங்கம் 15–5–1964 தேதிய ஆணை எண் 1587 உணவு விவசாயத் தின் படி ஒப்புதல் அளிக்கிறது.

* வடஆற்காடு மாவட்டத்தில் 1964–65–ல் இன்னும் 2,000 ஏக்கர்களில் குள்ள வாழை எனப்படும் பச்சை வாழையை (Mauritius) அதிக சாகுபடிக்கு கொண்டு வருதல்.

*பின் 1965–66-ல் இத்திட்டத்தின்படி திருச்சி மாவட்டத்தில் 2000 ஏக்கரில் பூவன் வாழையை அதிகமாக சாகுபடி செய்தல்.

* உள்ளூரில் வாழைப்பழத்தின் விலையேற்றத்தைத் தடுத்தல்.

* 30,000 டன் உபரி வாழைப் பழ உர்பத்தி செய்து ஜப்பான், ரஷ்யா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு அவற்றை ஏற்றுமதி செய்தல்.

இத்திட்டத்தின்கீழ் ஒரு உதவி பழ நிபுணர், இரண்டு பழ உதவியாளர்கள், பத்து பீல்ட்மேன்கள், மற்றும் எழுத்தர் முதலியோர் பிரத்தியேகமாக நியமிக்கப்படுவர்.

தென்னை தாய்மரப் போட்டி 1962–63 திருச்சிராப்பள்ளி வட்டம்

தென்னை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 1962–63-ம் ஆண்டிற்கு தென்னை தாய்மரப் போட்டி நடந்தது. இந்தப் போட்டியில் அந்தநல்லூர், மணிகண்டம், பூவாளூர், முசிரி ஆகிய பஞ்சாயத்து யூனியன் எல்லையிலுள்ள இருபத்து மூன்று விவசாயிகள் கலந்துகொண்டார்கள். இந்தப் போட்டிக்கு மொத்தம் பதிவு செய்யப்பட்ட விஸ்தீரணம் 50 எக்கர். தேர்ந்தெடுக்கப்பட்ட தாய்மரங்களின் மொத்த எண்ணிக்கை 542.

போட்டியின் விதிப்படி ஒவ்வொரு தாய் மரத்திற்கும் ரூ. 2 வழங்கப்பட்டது. மொத்தம் ரூ. 1,084 அரசினர் பரிசுப் பத்திரமாக

போட்டியில் வெற்றி பெற்றோருக்கு கலெக்டர் அரசினர் பரிசு பத்திரம் வழங்குதல்

வெற்றி பெற்ற தோட்டத்தின் சொந்தக்காரர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டது. இதுதவிர ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் அளவிலும் யார் அதிக பரிசு பெற்றார்களோ அவர்களுக்கு தனி நற்சாட்சிப்பத்திரம் வழங்கப்பட்டது.

இந்தப் பரிசு வழங்கும் விழாவில் 1964-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 30-ந் தேதியில் அந்தநல்லூர் பஞ்சாயத்து ஒன்றிப்பு அலுவலகத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்ட தண்டல் நாயகம், திரு கே. சொக்கலிங்கம், ஐ. ஏ. எஸ். அவர்கள் தலைமை வகித்து பரிசு வழங்கினார்கள்.



தென்னை தாய்மரப் போட்டி பரிசு வழங்கும் விழாவில் கலந்துகொண்ட திருச்சி கலெக்டர், திரு சொக்கலிங்கம், ஐ.ஏ.எஸ்., மாவட்ட விவசாய அலுவலர், திரு ஆறுமுகவேலு, மற்றும் பலர்

மண்வளப் பாதுகாப்பு பரிசோதனை முடிவுகள்

மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் சமதளச் சாகுபடி, இரசாயன உரமிடல், தொழு அல்லது கம்போஸ்ட் எரு இடல் போன்ற உயர்தர சாகுபடி முறைகளைப் பற்றிய பரிசோதனை நிரூபணங்கள் திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி உப தொகுதிகளில் நடத்தப்பட்டன.

அவைகளின் முடிவுகள்: (1) சமதள சாகுபடி செய்த நிலங்களில் மேடு பள்ள நிலங்களைவிட, சோளத்தில் 3·1% அதிக விளைசசலும், நிலக்கடலையில் 7½% அதிகமும், கம்பில் 5·8% அதிக விளைச்சலும் கிடைத்தன.

(2) 20 ராத்தல் தழைச்சத்து இட்ட நிலங்கள், இரசாயன எரு இடாத நிலங்களைவிட, நிலக்கடலையில் 14.7% அதிக விளைச்சலும், கம்பில் 41·5% அதிக விளைச்சலும், சோளத்தில் 18·8% அதிக விளைச்சலும் கொடுத்தன.

(3) 5 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் இட்ட நிலங்களில் எரு இடாத நிலங்களைவிட நிலக்கடலையில் 7.9% அதிக விளைச்சலும், சாமையில் 13·9% அதிக விளைச்சலும், கம்பில் 17% அதிக விளைச்சலும் கிடைத்தன.

FACTAMFOS
F.A.C.T. LTD. ALWAYE
GRANULATED
AMMONIUM
PHOSPHATE
KERALA STATE
50 Kg. GROSS
பயிர்களுக்கு பயன்படும்
பாக்டம்பாஸ்
(அமோனியம் பாஸ்பேட்)
FACT
அமோனியாவையும் பாஸ்பாரிக அமிலத்தையும் 16 : 20 விகிதத்தில் தயாரிக்கப்படும் அதிசய உரம் பாக்டம்பாஸ் நிலைத்து நிற்கக்கூடியது. ஈரத்தை ஈர்க்காதது. தண்ணீரில் முற்றிலும் கரைந்து தங்கு தடையின்றி பாயவல்லது பயிரின் பயனுள்ள பகுதிகள் எல்லாவற்றின் வளர்ச்சியையும் ஊக்குவிக்கும். பொதுவாக பயிர் ஆரோக்கியமாக வளர ஆக்கமளிக்கிறது.
உங்கள் தேவைக்கு பிராந்திய கிளை ஆபீஸுக்கு எழுதவும்.
FACT
foremost name in fertilisers!
பெர்டிலைசர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவிதாங்கூர் லிமிடெட்
ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் : ஏலூர், உத்யோகமண்டல் P.O. கேரள ராஜ்யம்
பிராந்திய கிளை ஆபீஸ் :
30, பாரதி ரோடு, ராம்நகர், கோயமுத்தூர்-9.
CRITERION-FT-327

வீட்டுத் தோட்டத்தைக் காப்பீர்

கா. சிவப்பிரகாசம், பி.எஸ்சி. (வேளாண்மை), பூசணஇயல் உதவியாளர்.
சி. எஸ். கிருட்டிணமூர்த்தி, பி.எஸ்சி. (வேளாண்மை) பூசணஇயல் நிபுணர்.
எச். டி. லெவின், எம்.எஸ்சி. (வேளாண்மை), பூசணஇயல் உதவியாளர்.
வேளாண்மைக் கல்லூரி ஆய்வுக் கழகம், கோவை-3

வீட்டுத் தோட்டங்களில் பயிரிடும் காய்கறிகளில் கத்தரி, வெண்டை, தக்காளி, மிளகாய், வெங்காயம், அவரை, முட்டைக் கோசு, பூக்கோசு, முள்ளங்கி மற்றும் பூசணி, புடலை, பாகல் வகை (Cucurbits) முதலானவை முக்கிய மானவையாகும். இவற்றில் தோன்றும் முக்கியமான நோய்களைப்பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டிருக்கின்றன.

1. கத்தரி

(அ) இலை சிறுத்தல் (Little leaf).—இந்நோயின் முக்கிய மான அறிகுறி இலை சிறுத்தலாகும். நோய் கண்ட செடி குட்டையாகவும் சிறுத்த இலைகள் அடங்கிய கிளைகளை அடர்த்தியாகக் கொண்டவையாகவும் தோன்றுகின்றன. கத்தரிச் செடியின் இயற்கைத் தோற்றமே மாறிவிடுகின் றது. இவ்வாறான செடிகளில் பூக்கள் தோன்றுவ தில்லை. தோன்றினாலும் இலைபோல் பசுமை நிறம் பெற்றுக் காணப்படுகின்றன. நோய் கண்ட செடியிலி ருந்து எவ்விதத்திலும் விளைவினை எதிர்பார்க்க இயலாது.

கத்தரி இலை சிறுத்தல்

தடுப்பு முறை.—நோயுற்ற செடிகளை அப்போதைக்கப் போது அழித்துவிட வேண்டும்.

பூச்சி கொல்லியினைக் (Pesticide) கத்தரிச் செடிகளில் தெளித்து நோய் பரவுவதற்குக் காரணமான வெள்ளைத் தத்துப் பூச்சிகளை (White Jassids) அப்போதைக்கப்போது அழித்து வரவேண்டும்.

இந் நோயால் பாதிக்கப்படும் தக்காளி, புகையிலை முத லானவைகளைக் (Solanaceous hosts) கத்தரி பயிரிடுவ தற்கு அருகாமையில் வளராமல் தவிர்த்தால் நோய் பரவுவது தடுக்கப்படுகிறது.

(ஆ) வாடல் (Wilt).—இந்நோயினைத் தக்காளி, மிளகாய் முதலானவற்றிலும் காணலாம். செடியின் அடிப்பாகத் தில் உள்ள இலைகள் ஆரம்பத்தில் பசுமையிழந்து வாடிக் காணப்படுகின்றன. பின்பு எல்லாப் பாகங்களுக்கும் பரவி இலைகள் யாவும் வாடிவிடுகின்றன. இறுதியில் தண்டும் பாதிக்கப்பட்டு செடி முழுவதும் காய்ந்து விடுகின்றது.

தடுப்பு முறை.—வாடிய செடிகளை உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டும். ஒரு சதவிகித போர்டோ கலவை அல்லது 0·1 சதவிகித நீரில் கரையும் செரசான் (Wet ceresan) இவற்றில் ஏதாவதொன்றால் செடிகளின் தூர்களைச் சுற்றிலும் நனைத்து (drenching) இந் நோயைத் தடுக்கலாம்.

2. வெண்டை

(அ) நரம்பு வெளுக்கும் தேமல் நோய் (Vein clearing mosaic).—இந் நோயினால் பாதிக்கப்பட்ட செடியில் உள்ள இலைகளின் நரம்புகள் மட்டும் மஞ்சள் நிறமாகவும் அவற்றிற்கு இடைப்பட்ட மற்ற பகுதி பசுமை நிறமாகவும் காணப்படுகின்றது. இறுதியில் இலை முழுவதும் பசுமை யிழந்து தோன்றும். செடி வளர்ச்சி குன்றித் தென் படும். கடினமான தன்மையைக் கொண்ட ஒரு சில காய்களே தோன்றுகின்றன.

தடுப்பு முறை.—தாக்கப்பட்ட செடிகளை அழித்துவிட வேண்டும். இந்நோயினைப் பரவச் செய்யும் வெள்ளைப் பூச்சிகளை (White flies) அப்போதைக்கப்போது அழித்து விடுதல் வேண்டும். மூன்று வாரத்திற்கு ஒருமுறை மீன் எண்ணெய் சோப்பினைத் (Fish oil rosin soap) தெளித்து இப்பூச்சிகளைக் கட்டுப் படுத்தலாம்.

(ஆ) சாம்பல் நோய் (Powdery mildew) :

இந்நோயினால் இலைகளில் வெண்ணிறப் பூசணப் படிவுகள் தோன்றுகின்றன. இலை முழுவதற்கும் பரவி இறுதியில் தாக்கப்பட்ட இலைகள் யாவும் காய்ந்து உதிர்ந்து விடுகின்றன. காலநிலை அனுகூலமாக இருந் தால் இந்நோய் மிகுதியான சேதத்தினை விளைவிக்கும் இயல்புடையது.



வெண்டை தேமல் நோய்

தடுப்புமுறை.—கந்தகத்தூளை (Sulphur dust) இலைகளில் தூவி இந்நோயைக் கட்டுப்படுத்தலாம்.

3. தக்காளி

(அ) இலைப் புள்ளி (Alternaria leaf spot)

இலைகளில் ஒழுங்கற்ற வடிவத்தைக் கொண்ட சிறிய புள்ளிகள் ஆரம்பத்தில் தோன்றுகின்றன. இவை நாளடைவில் விரிவடைந்து அப்புள்ளிகளில் ஒன்றை ஒன்று சூழ்ந்த வட்டமான கோடுகள் காணப்படுகின்றன. தீர்க்கப்பட்ட இலைகள் காய்ந்து உதிர்ந்து விடுகின்றன. பழங்களும் பாதிக்கப்படுகின்றன.



தக்காளி பழம் அழுகல்



தக்காளி இலைப்புள்ளி

ஸ்ரீ முருகன்
தமிழ்நாடு குடிசைத் தொழிற்கூடம்

44, வடக்கு ரத வீதி, சீர்காழி

(தஞ்சை மாவட்டம்)

(அரசினரால் பதிவு செய்யப்பட்டது.)

கைதேர்ந்த அனுபவமிக்க தொழிலாளர்களால் நீண்டகால உழைப்புக்கு ஏற்ற உறுதியான நவீன விவசாய கருவிகளை நேர்த்தியாக தயாரித்து சகாயமான விலையில் அளிக்கின்றோம். குறைந்த உழைப்பில் நிறைந்த உழவு சிக்கனம், உழும் காளைகளும் எளிதில் சோர்வு அடையாது. விவசாய இலாகா, வட்டார வளர்ச்சி அலுவலகங்கள், கூட்டுறவு விவசாய சங்கங்கள், ஜப்பல்பூர் விவசாய ஆராய்ச்சியாளர்களால் எங்கள் கருவிகள் பாராட்டப்பட்டுள்ளதால் உங்களுக்கு இலாபமே.

எமது தயாரிப்புகள் :—(1) மேலூர் கலப்பைகள், (2) இரும்புக் கலப்பைகள், (3) தழை அமுக்கும் செட்டுகள், (4) களை எடுக்கும் கருவி, (5) வரப்புக் கட்டும் கருவி, (6) பரம்புப் பலகை, (7) மண் வெட்டி வகைகள், (8) கொழு வகைகள், (9) தேன் பிழியும் கருவி, (10) சேறு கலக்கும் பட்லர்கள், (11) முளை பரிசோதனைத் தட்டுகள் (12) விதைகளுக்கு மருந்து கலக்கும் ட்ரம்.

S. சாமிநாதன்,
உரிமையாளர்.

தடுப்பு முறை.—ஒரு சதவிகித போர்டோ கலவை அல்லது ஏதாவதொரு தாம்மிரம் கலந்த பூசணங் கொல்லியினைக் (Copper fungicide) கால நிலைக்கும் நோயின் கடுமைக்கும் தக்கவாறு இரண்டு அல்லது மூன்று முறைகள் தெளிக்கவேண்டும்.

(ஆ) பழம் அழுகல் (Fruit rot)

ஆரம்பத்தில் பிஞ்சு, காய், பழம் முதலானவற்றில் சிறிய புள்ளிகள் தோன்றுகின்றன. புள்ளிகள் விரிவடைந்து பெரும்பாகம் அழுகிவிடுகின்றது. இதனால் மிகுதியான அளவில் விளைவு பாதிக்கப்படுகிறது.

தடுப்பு முறை.—பாதிக்கப்பட்ட பழங்களை அகற்றிவிட வேண்டும். ஒரு சத விகித போர்டோ கலவை அல்லது ஏதாவதொரு தாமிரம் கலந்த பூசணங்கொல்லியைத் தெளிக்க வேண்டும்.

4. மிளகாய்

(அ). பழம் அழுகல் (Fruit rot)

மிளகாய்ப்பழங்களில் புள்ளிகள் தோன்றி, பின்பு பெரிதாகி நிறம் வெளுத்து உலர்ந்து விடுகின்றன. பழங்களின் காரத்தன்மை குறைந்துவிடும். இளங் கிளைகளிலுள்ள இலைகளும் உதிர்ந்து பின் நுனிப்பாகத்திலிருந்து அவை பின்நோக்கிக் காய்ந்துகொண்டுவரும்.

தடுப்பு முறை : நோய் தாக்கப்படாத பழங்களிலிருந்து எடுத்த விதைகளைப் பயன்படுத்த வேண்டும்.



மிளகாய் பழம் அழுகல்

ஒரு சத விகித போர்டோ கலவையை செடி பூக்க ஆரம்பிப்பதற்கு முன்பு ஒரு முறையும் காய்ப்பிடிப் பின்போது ஒரு முறையும் தெளிக்க வேண்டும். தேவைப்பட்டால் நோயின் கடுமைக்குத் தக்கவாறு 15 நாட்கள் கழித்து மற்றொரு முறை தெளிக்கலாம்.

(ஆ) சாம்பல் நோய் (Powdery mildew)

இந்நோயினைக் கத்தரி, கொத்தவரை முதலான வற்றிலும் காணலாம். இலைகளில் வெண்மையான பூசணப் படிவுகள் உண்டாகின்றன. இலைகள் முழு வளர்ச்சியடையாமல் காய்ந்து உதிர்ந்து விடுகின்றன.

தடுப்பு முறை.—ஒரு சத விகித போர்டோ கலவையைத் தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

5. வெங்காயம்

(அ) இலைப்புள்ளி நோய் (Alternaria leaf spot)

இலைகளில் வட்டவடிவம் கொண்ட வெண்மையான சிறிய புள்ளிகள் தோன்றுகின்றன. நாளடைவில் இவை விரிவடைந்து பழுப்புநிறம் கொண்டவையாக மாறுகின்றன. சில சமயங்களில் ஆரஞ்சு நிறச்சுற்றுப்புறத்தைக் கொண்டிருக்கின்றன. இறுதியில் இலைப்பாரம் முழுதும் மஞ்சள் நிறம் பெற்றுக் கருகி விடுகின்றது.

வெங்காயம்
இலைப்புள்ளி நோய்

தடுப்புமுறை —பயிர்ச் சுழற்சியை (Crop rotation) மேற்கொள்ளவேண்டும்.

பாதிக்கப்பட்ட இலைகளை நீக்கிவிட்டு ஒரு சதவிகித போர்டோ கலவை அல்லது ஏதாவதொரு தாமிரம் கலந்த பூசணங்கொல்லியைப் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை வீதம் குறைந்தது இரண்டு தடவைகள் தெளித்தல் வேண்டும்.

6. அவரை

(அ) செம்புள்ளி நோய் (Anthraenose)

இந்நோய் விதைகளின்மூலம் பரவக்கூடியது. செடியின் தண்டு பாகத்தில் பழுப்புநிறக் கோடுகள் தோன்றுகின்றன. இலைகளிலும் புள்ளிகள் தோன்றுவதால் அவற்றைச் சுற்றியுள்ள பாகம் காய்ந்து விடுகின்றது. காய்களில் அழுங்கிய நிலையில் கருநிறச் சுற்றுப் புறத்தைக் கொண்ட பழுப்பு நிறப்புள்ளிகள் தோன்றுகின்றன. ஆதலால் காய்கள் மிகுந்த சேதத்திற்குள்ளாகி விதைகளும் பாதிக்கப்படுவதால் விளைவு குறைந்து விடுகிறது.



அவரை
செம்புள்ளி நோய்

தடுப்பு முறை ; நோய் தாக்காத செடியிலிருந்து எடுத்த விதைகளையே பயன்படுத்த வேண்டும்.

0·25 சதவிகித பார்மெலினில் (Formalin) ஒரு மணி நேரம் விதைகளை அமுக்கி வைத்திருந்து பின்பு விதைக்க வேண்டும்.



அவரை துருநோய்

செடிகளின் மேல் போர்டோ கலவையைத் தெளிக்க வேண்டும்.

(ஆ) துரு நோய் : (Rust)

இலைகளில் வெண்மையான புள்ளிகள் ஆரம்பத்தில் தோன்றி பின்பு விரிவடைந்து காணப்படுகின்றன. அவற்றின் மேல் எழும்பிய நிலையில் பழுப்பு நிறத்தில் துருப்பிடித்த தோற்றத்தைக் காணலாம். பழுப்புநிறத் துரு நாளடைவில் கரும் பழுப்புநிறமாகவோ கருமை நிறமாகவோ மாற்றமடைகின்றது. காய்களிலும், ஒரு சில சமயங்களில் தண்டிலும் இலைக்காம்பிலும் கூட இத்துருவினைக் காணலாம்.

தடுப்பு முறை.—நோயின் ஆரம்ப அறிகுறி தோன்றியதும் கந்தகத்தூளை தூவி இந்நோயைத் தடுக்கலாம்.

7. முட்டைகோசு, பூக்கோசு (Cauli flower), முள்ளங்கி முதலியன

(அ) வேர்க்கிளை வீக்க நோய் (Club root of crucifers)

இந்நோய்க்கு இலக்கான முட்டைக்கோசு, பூக்கோசு, முள்ளங்கி முதலானவற்றின் வேர்ப்பாகம் அளவுக்குமீறிப் பெருத்து வீக்கத்துடன் காணப்படும். செடிவளரும் பருவத்தில் எப்பொழுது வேண்டுமாயினும் இந்நோய் தாக்கலாம். செடியின் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டப் பொருளை வேர்ப்பாகம் அளிக்க முடிவதில்லையாதலால் செடி செழிப்பற்று நாளடைவில் வாடி விடுகின்றது.

தடுப்பு முறை.—நாற்றும் பரவுவதற்கு நான்கு வாரங்களுக்கு முன்பு 2 சதவிகித பார்மெலினை (Formalin) ஒரு சதுர கெசத்திற்கு இரண்டு காலன் வீதம் உபயோகித்து நாற்றங்காலை நனைக்க வேண்டும்.

அதிக அளவில் கரிம உரங்களைப் (Organic manure) பாடுதல் கூடாது.

வேர்க்கிளை வீக்க நோய்

பயிர்ச் சுழற்சியை மேற்கொண்டு இந்நோய் தாக்காதபற்ற பயிர்களையும் மாற்றி மாற்றிப் பயிரிட்டு வரவேண்டும்

அதிக மகசூலால் அதிக வருவாய் பெறும்
பெரிய தோட்டக்காரர்கள்
சிறந்த ஜாதி காய்கறி விதைகள் பெறுமிடம் :

ராஜா பண்ணைத் தோட்டம்

இக்காலத்துக்குத் தகுதியான
நோய் அணுகா, அதிக மகசூல் தரும் கவர்ச்சிகர ஜாதி

வெண்டை

மிகப் பெரிய நீண்ட, சதை பருத்த ருசி
மிகுந்த அதிசய ஜாதி

கொத்தவரை

ருசி மிகுந்த, கவர்ச்சிகரமான 14 வித புகழ் பெற்ற

கத்திரி

புகழ் பெற்ற பெரிய ரோஜா உருண்டை பல்லாரி

வெங்காயம்

இதர பலவித உயர்ந்த கோடை மிளகாய், முள்ளங்கி
ஜாதிகள், பரங்கி, பூசணி, வெள்ளரி முதலான
காய்கறி விதைகள், பழச் செடிகள், தென்னங்
கன்றுகள், களை நாசினிகள்

கிடைக்குமிடம் :—

ராஜா பண்ணைத் தோட்டம்

தபால் பெட்டி எண் 1423, சென்னை-17.

தந்தி : RAJSEED　　போன் : 42262

ஏக்கருக்கு அரை முதல் இரண்டு டன் அளவுள்ள சுண்ணும்பினை (Lime) நிலத்திற்கு போடவேண்டும்.

பாதரசக் குளோரைடு (Mercuric Chloride) ஒரு இராத்தல் 150 காலன் நீரில் கரைத்து ஒரு செடிக்கு 125 சி.சி வீதம் நடவின்போது நடவுக் குழிகளில் ஊற்றினல் இந்நோய் தோன்றுவது ஓரளவு தடுக்கப் படுகிறது.

8. பூசணி, புடலை. பாகல் வகை (Cucurbits)

(அ) புள்ளி நோய் (Anthracnose)

இலைகளில் கோணவடிவம் அல்லது ஓரளவு வட்டவடிவத்தைக் கொண்ட பழுப்பு நிறப் புள்ளிகள் தோன்றுகின்றன. நாளடைவில் இப் புள்ளிகள் இணைந்து இலை முழுவதும் காய்ந்த தோற்றத்தில் காணப்படும். இலைக் காம்பிலும் தண்டிலும் புள்ளிகள் தோன்றுகின்றன. ஒரு சில சமயங்களில் காய்களில் அமுங்கிய நிலையில் கரும்புள்ளிகள் தோன்றுவதால் காய்களும் பாதிக்கப் படுகின்றன. காய்கள் முழு வளர்ச்சி பெறுவதில்லை.

தடுப்புமுறை.—விதைகளில் ஸ்பெர்கான், அக்ரசான் போன்ற மருந்துகளைக் கலந்து விதைக்க வேண்டும்.

பயிர் சுழற்சியை மேற்கொள்ளவேண்டும்.

பயிரினைத் துப்புரவாக (Plant sanitation) வைத்திருத்தல் வேண்டும்.

டைத்தேன் என்னும் மருந்தைச் செடிகளில் தெளிக்க வேண்டும்.

(ஆ) சாம்பல் நோய் (Powder mildew)

இலைகளில் சாம்பல் நிறப் படிவுகள் தோன்றுகின்றன. இலை முழுவதற்கும் பரவுவதால் நாளடைவில் இலைகள் காய்ந்து உதிர்ந்துவிடுகின்றன.

தடுப்புமுறை.—கந்தகத்தூளை ஒருமுறை தூவி இந் நோயைக் கட்டுப்படுத்தலாம்.

(இ) அடித்தேமல் (Downy mildew)

இலைகளில் வெளுத்த மஞ்சள் நிறத்தில் கோணவடிவத்தைக் கொண்ட பகுதிகள் (angular patches) தோன்றுகின்றன. இவை பின்பு பழுப்புகலந்த மஞ்சள் நிறம் கொண்டவையாக மாறுகின்றன. இலையின் அடிப்பாகத்தில் இப்புள்ளிகளுக்கு எதிர்புறத்தில் பூசணத்தின் வளர்ச்சியைக் காணலாம். நாளடைவில் இலையின் பெரும்பாகம் பாதிக்கப்படுவதால் இலைகள் காய்ந்து உதிர்ந்துவிடுகின்றன. சிறிய ஒழுங்கற்ற வடிவத்தைக் கொண்ட காய்களே உண்டாகின்றன.

பூசணி, புடலை, பாகல்வகை அடித்தேமல்

தடுப்புமுறை.—போர்டோ கலவையைத் தெளித்து இந் நோயைக் கட்டுப்படுத்தலாம். ஆயினும் அதிக வீரியமுள்ள (high concentration) போர்டோ கலவையை இவ்வகைச் செடிகளில் தெளித்தால் செடிகள் காய்ந்துவிடுகின்றன. ஆதலால் இரண்டு இராத்தல் மயில்துத்தமும் (Copper-sulphate) இரண்டு இராத்தல் சுண்ணும்பும் 50 காலன் தண்ணீரில் கரைத்துத் தயாரித்த குறைந்த அளவு வீரிய முள்ள (low concentration) போர்டோ கலவையினைத் தெளிக்கலாம்.

நாட்டின் வறுமை நீங்க, வாழ்வு ஓங்க வீட்டுத் தோட்டம் அமைத்து, அத் தோட்டங்களை நோய்களின்றும் காப்பீர்!

[12-ம் பக்கம் தொடர்ச்சி]

தில் சோதனை செய்யப்பட்டது. மகசூல் விவரம் பின் வருமாறு :—

ரகத்தின் விபரம்.	விதைப்பிலிருந்து பூக்க எடுத்துக் கொண்ட நாட்கள்.	ஏக்கர் ஒன்றுக்கு கொடுத்த மகசூல் (கிலோவில்).	ஏ.டி.டீ. 8ஐவிட அதிகமாக கொடுத்த மகசூலின் சதவிகிதம்.
(1)	(2)	(3)	(4)
ஏ.டி.டீ. 8	114	941	..
ஏ.எஸ்.டி. 5	110	1,238	31·6
ஏ.எஸ்.டி. 11	110	1,027	9.1
கோ. 2	110	929	1·2
கோ. 30	110	956	1·6

இந்த ரகத்தின் வயதை ஒத்த மற்ற ரகங்களைவிட 22·6 லிருந்து 32·8 சதவிகிதம் அதிகமாக கொடுத்துள்ளது. ஏ.டி.டீ. 8 ஐவிட 31·6 சதவிகிதம் அதிகமாகக் கொடுத்துள்ளது.

இந்த ரகத்தை பட்டுக்கோட்டை விவசாய ஆராய்ச்சிப் பண்ணையிலும் 1947-48, 1949-50 ஆகிய மூன்று ஆண்டுகள் தாளடிப்பட்டத்தில், இதையொத்த வயதையுடைய ரகங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது.

பட்டுக்கோட்டை ஆராய்ச்சிப் பண்ணையிலும் இந்த ரகம் ஏ.டி.டீ. 8ஐ விட 60 ராத்தலும் மற்ற ரகங்களைவிட அதிக மகசூலும் கொடுத்துள்ளது. இதிலிருந்து பட்டுக் கோட்டை ஆராய்ச்சி நிலையத்தை ஒத்த நிலங்களிலும் இந்த ரகம் நல்ல மகசூல் கொடுக்கும் குணமுடையது எனத் தெரிகின்றது.

இவ்வாராய்ச்சி முடிவுகள்

1. தஞ்சை மாவட்டத்தில் தாளடிப்பட்டத்திலும் பிந்திய தாளடிப்பட்டத்திலும் ஏ.எஸ்.டி. 5 (கார்த்திகை சம்பா) பயிரிடத்தகுந்தது.

2. வயதில் சிறிது குறைவாக இருப்பதும் பிந்திய தாளடிப்பட்டத்தில் நல்ல மகசூல் கொடுக்கும் தன்மையும் இந்த ரகத்திற்கே ஓர் தனிச்சிறப்பாகும்.

3. தாளடிப்பட்டத்திற்கும் பிந்திய தாளடிப்பட்டத்திற்கும் தற்போது உள்ள ரகங்களுடன் சன்னரகம் வேண்டுவோர் இதையும் ஓர் மாற்று ரகமாகப் பயிரிட்டு நல்ல மகசூல் அடையமுடியும்.

விவசாயச் செய்திக் கதிர்

விரிவினைப் பிரிவு, கோவை.

69673

களர் நிலங்களைத் திருத்துதல்

தமிழ் நாட்டிலுள்ள சுமார் இரண்டு லட்சம் எக்கர் களர் நிலங்களைத் திருத்திப் பயிர்விளைவிப்பதன் மூலம் பயிர் உற்பத்தியைப் பெருமளவில் அதிகரிக்கலாம். தமிழ்நாட்டின் உட்பகுதிகளில் மழைக்குறைவாயுள்ள இடங்களில் மண்ணிலுள்ள உப்புக்களைக் கரைத்து வெளியேற்றுவதற்குத் தேவையான நீர் இல்லாத இடங்களில் களர் நிலங்கள் தோன்றுகின்றன. கடற்கரைப் பிரதேசங்களில் உவர் நிலங்கள் உண்டாகின்றன. நீலகிரி மாவட்டத்தைத் தவிர தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் ஓரளவுக்குக் களர் நிலங்கள் காணப்படுகின்றன. உப்பு நீரைப் பாசனத்துக்கு உபயோகிப்பதாலும் வடிகால் வசதி இன்மையாலும் களர் நிலங்கள் உண்டாகின்றன. களர் நிலங்களிலும், உவர் நிலங்களிலும் 0·1 சத வீதத்திற்கும் மேற்பட்ட அளவு உப்புக்கள் அடங்கியிருக்கின்றன. களர் நிலங்களைத் திருத்தும் முறைகள் பின்வரும் மூன்று தத்துவங்கள் அடிப்படையில் அமைய வேண்டும்.

(i) மண்ணிலுள்ள உப்புக்களை நீரின் மூலம் கரைத்து அகற்றுதல்;

(ii) நல்ல வடிகால் வசதி அமைத்தல்;

(iii) மண்திருத்திகளை மண்ணிலிடுதல்.

களர் நிலங்களைத் திருத்துவதற்குமுன் மண்ணின் களர் அல்லது உவர் தன்மையின் அளவை அறிய மண்ணைப் பரிசோதனை செய்யவேண்டும். சோடியம் குளோரைடு அல்லது சல்பேட் உப்புக்கள் மட்டும் மண்ணில் இருந்தால் அவ்வுப்புக்களை நிலத்தில் தண்ணீர்விட்டு கரைத்து வெளியேற்றி கரைந்த உப்புடன் கூடிய நீரை வடிகால் மூலம் வடித்து அகற்றுவதன் மூலம் மண்ணைத் திருத்தலாம். சோடியம் கார்பனேட், பை கார்பனேட் உள்ள மண்களை மேற்கூறிய முறையில் திருத்தமுடியாது. ஏனெனில் இம்மண்களில் இரசாயன மாறுதல்கள் ஏற்பட்டிருக்கும். ஆகவே, அத்தகைய மண்களை கந்தகம் அல்லது ஜிப்சம் போன்ற இராசயனப் பொருள்களை இடுவதன் மூலம்தான் திருத்த முடியும். இந்த இரசாயனப் பொருள்கள் இரசாயன, மற்றும் உயிரியல் ஆக்வீகரணததினால் வெளியிடும் அமிலப் பொருட்கள் மண்ணின் தன்மையை மாற்றுகின்றன. உதாரணமாக ஜிப்சம் இடுவதனால் சோடியம் உப்புக்கள் உள்ள களிமண்கள் கால்சியம் உப்புள்ள மண்ணாக மாற்றப்படுகின்றன. மண்ணின் கூழ்த் தன்மையும், பௌதிகத் தன்மையும் அமைப்பும் மாற்றமடைகின்றன. இம்மாற்றங்கள் மண்ணை இளகச் செய்து மண்ணில் பாயும் நீர் வடிவதற்கு ஏற்றபடி அமையச் செய்கிறது.

1956–63 ஆண்டுகளில் களர் நிலங்களைத் திருத்துவதற்குச் சிறந்த முறைகளைப் பற்றிய பரிசோதனைகள் கோவை விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்திலுள்ள மண் இரசாயனப் பிரிவில் மேற்கொள்ளப்பட்டன. இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் இப்பரிசோதனைகள் நடத்தப்பட்டன. இவற்றிலிருந்து நெற்சாகுபடியாகும் களிமண் நிலங்களை எக்கருக்கு நாலு டன் ஜிப்சம் அல்லது இரண்டு டன் ஜிப்சத்தோடு 5,000 டன் தழை உரத்தை இடுவதன் மூலம் திருத்தலாம் என்று தெரிகிறது. இந்நிலங்களில் நெற்பயிரும், தக்கைப் பூண்டும் திருப்திகரமான முறையில் பயிரிடப்பட்டன. ஆண்டுக்கு ஆண்டு நெற்பயிரின் மகசூல் அதிகரித்துக் கொண்டே வந்தது. குறுமண்களிலும் ஜிப்சம் உபயோகிப்பதன் மூலம் திருப்திகரமான அளவு மகசூல் அதிகரித்தது. எக்கருக்கு 10 டன் தொழு உரமும் நான்கு டன்கள் ஜிப்சமும் இட்டதன் மூலம் இம்மண்கள் திருத்தி அமைக்கப்பட்டன. சுண்ணாம்பு மேலிட்ட மணற்பாங்கான மண்களில் பசுந்தழை உரம் மட்டுமோ அல்லது ஐந்து டன்கள் தொழு உரமும் நான்கு டன்கள் ஜிப்சமும் சேர்த்து இடுவதன் மூலம் நல்ல மகசூல் கிடைத்தது. இப்பரிசோதனைகளிலிருந்து, களர் நிலங்களில் வரப்புகட்டி நிலத்தை வெள்ளப்படுத்தி நீரை வடிப்பதன் மூலமும் நிலத்தின் உப்புத்தன்மையைக் குறைக்க முடியும் என்று தெரிகிறது.

ஆரம்பத்தில் வரப்புகட்டி வடிகால் கால்வாய்கள் வெட்ட எக்கருக்கு சுமார் 200 ரூபாய் ஆகும். வரப்புகள் சுமார் ஒரு அடி உயரமுள்ளவைகளாகவும், வடிகால் கால்வாய்கள் இரண்டடி அகலமும் 2½ அடி ஆழமும் உள்ளதாயிருக்க வேண்டும். ஆரம்பத்தில் வரப்புகளையும் கால்வாய்களையும் வெட்டியபின் அடுத்துவரும் ஆண்டுகளில் அவற்றை ஒழுங்கு படுத்துவதற்கு ஆண்டுக்கு எக்கருக்கு சுமார் ரூபாய் 50-லிருந்து 75 வரைதான் செலவாகும். ஒரு டன் ஜிப்சத்தின் விலை ரூபாய் 80.

வரப்புகளும் கால்வாய்களும் வெட்டப்பட்ட நிலத்தில் ஜிப்சம் போன்ற மண் திருத்திகள் இடப்பட்டு நிலம் வெள்ளப்படுத்தப்படுகிறது. வெள்ளப்படுத்த உபயோகப்படுத்தும் நீரில் உப்புக்கள் அதிகமாக இருக்கக்கூடாது. ஒரு நாள் முழுவதும் வயலில் நீர் தேக்கி வைக்கப்பட்டு பின் நீர் கசிவால் வடிக்கப்படுகிறது. இவ்வாறு மூன்று நான்கு முறைகள் தொடர்ந்து செய்தபின் அந்நிலத்தில் தக்கைப் பூண்டு போன்ற பசுந்தாளுரப்பயிர் பயிரிடப்பட்டு நிலத்தில் மடக்கி உழப்படுகிறது. பின் அந்நிலத்தில் நெல் அல்லது ராகிப்பயிர் சாகுபடி செய்யலாம்.

தக்காளிச் செடியைச் சீராகப் படரவிடுதல்

தக்காளிச் செடி வளரும்போது அதற்கு ஆதாரமாக குச்சி ஒன்றை ஊன்றுவதன் மூலமும், சீராகப் படரவிடுவதன் மூலமும் தக்காளியின் மகசூலையும் தரத்தையும் உயர்த்தலாம். ஆகவே தக்காளிச் செடியை அதன் விருப்பப்படி வளர்ந்து கிளைத்துப் படர விடக்கூடாது.

வீட்டுத் தோட்டங்களில் வளர்க்கும் செடிகளுக்கு அவை படருவதற்காக செடிகளுக்கருகில் 5 அடி உயரமுள்ள மூங்கில் குச்சியை ஒரு அடி ஆழம் மண்ணிற்குள் செல்லும்படி ஊன்றி, செடி வளரவளர கிளைகளின் நுனிகளை மூங்கில் குச்சியோடு இரண்டு மூன்று இடங்களில் வாழை நாரினால் கட்டலாம். பெருமளவில் சாகுபடி செய்யும் தோட்டங்களில் 20–25 அடி தூரத்திற்கொன்றாக உறுதியான மரக் குச்சிகளை நட்டு அக்குச்சிகளில் பூமி மட்டத்திலிருந்து ஒரு அடி, இரண்டடி உயரத்துக்கு இரண்டு கயிறுகளைக் கட்டவேண்டும். பின் இக்கயிறுகளுக்கிடையே மெல்லிய கயிரைக் கட்டவும். செடிகள் வளரவளர அவற்றின் நுனியையும் கிளைகளின் நுனியையும் மெல்லிய கயிற்றில் இலேசாக முறுக்கி விட்டுவிடலாம். குட்டையான அதிகமாகக் கிளைக்காத ரகங்களின் செடிகளுக்கருகில் இரண்டடி குச்சியை நட்டு செடியை குச்சியோடு சேர்த்துக் கட்டி விடலாம்.

JL
J·211m,N64
N64·21

தஞ்சை தீவிர சாகுபடித் திட்டத்தில் என் அனுபவம்

என். சீத்தாராமையர், திருப்பயணம்.

நான் 12 எக்கர் நஞ்சை சாகுபடி செய்து வருகின்றேன். அதில் கடந்த 15 ஆண்டுகளாக விவசாய இலாக்காவில் சிபார்சு செய்யப்படும் திருந்திய முறை சாகுபடியே செய்து வருகின்றேன். இப்போது "தீவிர சாகுபடித் திட்டம்" அமுலாக்கப்பட்டதிலிருந்து தீவிரமான சாகுபடி செய்து வருகின்றேன். வருடாவருடம் நான் நெல் மகசூல் போட்டியில் கலந்துகொண்டு மும்முறை பரிசுகள் வெங்கியுள்ளேன். எனக்கு இலாக்கா முறைகள் அறிமுகமாகுமுன் நான் நாட்டு முறையிலேயே சாகுபடி செய்துவந்தேன். அந்த முறையில் எனக்கு மாவுக்கு சராசரி 10 கலம்தான் கண்டது (அதாவது எக்கருக்கு 1,900 ராத்தல்) ஆனால் இப்பொழுது எனக்கு குறுவையில் குறைந்த அளவு 15 கலமும் (எக்கருக்கு 2,800 ராத்தல்) அதிக அளவு 22 கலமும் (எக்கருக்கு 3,960 ராத்தல்) கண்டுள்ளது. தாளடியில் அதிக அளவு 5,262 ராத்தல், அதாவது மாவிற்கு 28 கலம் கண்டுள்ளது.

என்னுடைய நிலங்களில் எல்லா நாற்றங்காலிலும் ஒரு தடவை பி எச். சி. 10 சதவீதம் டி. டி. டீ. 5 சதவீதம் எக்கருக்கு 10 கிலோ வீதம் பூச்சி மருந்து தூவுவேன். பிறகு நடுவதற்கு ஒரு வாரத்திற்கு முன் ஒரு தடவை பி. எச். சி. 50 சதவீதமும் பைடோலான் மருந்தும் கலந்து தெளிப்பேன். எல்லா நடவு வயலும் கூடியமட்டும் வரிசை நடவிலேயே நடுவது வழக்கம். வரிசை நடவு வயல்களில் இடை உழவு கருவி வைத்து இரண்டுமுறை இடை உழவு செய்வேன். வரிசை நடவுநட்ட வயல்களில் சாதாரண நடவு வயல்களின் மகசூலை விட சராசரி இரண்டு மூட்டைகள் அதிகமாக கிடைத்திருக்கிறது. அலுவலகத்தின் உதவியால் தெளிப்பான் கருவிகளை வாடகைக்கு வாங்கி எல்லா நிலங்களிலும் பூச்சி மருந்து தெளித்து வருகின்றேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக என்னுடைய நிலத்தின் மண் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. முதல் ஆண்டு பரிசோதனைக்கு அனுப்பியதில் எக்கருக்கு 225 ராத்தல் சூப்பரும் 150 பவுன் அமோனியம் சல்பேட்டும் போடும்படி சிபார்சு செய்யப்பட்டது. அதன்படி உரம் போட்டேன். ஆனால் அந்த வருடம் மழையின் காரணத்தால் எக்கருக்கு 2,460 ராத்தல்தான் விளைந்தது. அதாவது சிபார்சை கையாளும்முன் விளைந்த 2,520 ராத்தலைவிட குறைவாகக் கண்டது. இரண்டாம் வருடம் அதே நிலத்தின் மண் பரிசோதனைக்கு அனுப்பியதில் 150 பவுண்டு சூப்பர் போதும் என்று சிபார்சு செய்யப்பட்டது. அதன்படி சூப்பர் இடப்பட்டது. அவ்வாறு இட்டதில் இந்த ஆண்டு எனக்கு விளைவு 210 ராத்தல் முதல் வருடத்தை விட அதிகமாக விளைந்தது. ஆகவே மண் பரிசோதனை எல்லா நிலங்களுக்கும் தேவை என்பது தெளிவாகிறது.

நான் கடந்த மூன்று ஆண்டுகளாக நெல் பயிர் விளைச்சல் போட்டியில் 1960–61-ல் கிராம அளவிலும், 1961–62-வட்டார அளவிலும், 1962-63-ல் ஜில்லா அளவிலும் பரிசுகள் பெற்றிருக்கின்றேன். 1963–64-ல் நான் மாகாண போட்டியில் கலந்துகொண்டேன். 1962–63-ல் ஜில்லா அளவில் பரிசு பெற்ற விபரத்தின் வரவு செலவு தொகுப்பு கீழே கொடுத்திருக்கின்றேன். நான் சென்ற மூன்றுண்டுகளாக போட்டியில் கலந்து கொண்டதில் அதன் மகசூலையும் கீழே கொடுத்திருக்கின்றேன்.

நெல் விளைச்சல் போட்டி		ராத்தல்
1960–61-ல் கிராம அளவில் கண்டு முதல் எக்கருக்கு	..	4,215
1961–62-ல் கிராம அளவில் கண்டு முதல் எக்கருக்கு.	..	6,695
வட்டார அளவில் கண்டு முதல் எக்கருக்கு.	..	6,695
1962–63-ல் ஜில்லா அளவில் கண்டு முதல் எக்கருக்கு.	..	5,562
1963–64-ல் மாகாண அளவில் கண்டு முதல் எக்கருக்கு.	..	5,262

1962–63-ல் ஜில்லா அளவில் நெல் பயிர் விளைச்சல் போட்டியில் கோ. 25 தாளடி சாகுபடி வரவு செலவு குறிப்பு :—

		ரூ.	நபை
நாத்தங்காலுக்கு எரு 13 செண்டுக்கு 2 வண்டிக்கு.	..	2	00
நாத்தாங்கால் உழவு 6 சாலுக்கு ..	..	5	00
கோ. 25 விதை 10½ மரக்காலுக்கு	..	10	50
18—8—62 உப்பு 2½ சின்ன படிக்கு	..	0	16
19—8—62 அக்ரசான் மருந்து செலவு	..	0	12
21—8—62 தெளி அடித்து விதைவிட்ட ஆள் ஒன்றுக்கு.	..	2	00
4—9—62 நாத்துக்கு டி. டி. டீ. 5 சதவீதம் பி. எச். சி. 10 சதவீதம்		0	80
27—9—62 பாலிடால், குப்ராவிட் மருந்துடன் ஸ்ப்ரே செய்த கூலி உள்பட.	..	2	02
களை எடுத்தது	..	1	00
நடவு வயலுக்கு உழவு 8 சாலுக்கு 24 எக்கருக்கு.	..	48	00
5—10—62 நாத்து பரி 11 கட்டு [பண்ணை முடி].	..	5	50
6—10—62 வயலுக்கு சூப்பர் 150 கிலோவுக்கு.	..	35	70
6—10—62 பொட்டாஷ் 21 கிலோவுக்கு	..	7	35
6—10—62 யூரியா 15¼ கிலோவுக்கு	..	11	76
		131	91
6—10—62 நடவு பெண்கள் 22-க்கு	..	24	75
6—10—62 நடவு ஆள் 4-க்கு	..	8	00
25—10—62 } களைபரி			
10—11—62 } இரண்டு தடவை (இடை உழவு)		5	00
12—11—62 }			
12—12—62 } பாலிடால், குப்ராவிட் ஸ்ப்ரே 2 தடவை.	..	11	86
மேற்படி மருந்தடித்த கூலி.	..	8	00
17—11—62 இரண்டாம் தடவை யூரியா 18 கிலோ.	..	13	01
1—1—63 மூன்றும் தடவை சல்பேட் 18 கிலோ.	..	6	66
எலிபிடி, நிளணிக்கம் காவல் வகையரு செலவு.	..	2	50
12—2—63 அறுவடை அறுப்பு ஆள் கூலி 4 கலத்துக்கு.	..	33	32
		245	01
12—2—63 நெல். கண்டுமுதல் 5562 பவு. (க. 1-க்கு 8·32 வீதம்) விலை.	..	786	08
மேற்படி வைக்கோல் 150 கட்டுக்கு	..	112	50
		898	58
நிகர லாபம்	..	654	57

இவ்வாறாக இலாக்காவின் மூலம் உதவி பெற்று தீவிர சாகுபடித் திட்டத்தை கையாண்டதில் எனக்கு கடந்த ஆண்டு 12 எக்கரில் ரூ. 2,100/ அதிக லாபம் கிடைத்தது. எனக்கு திருப்பயணம் பலநோக்கு கூட்டுறவு சங்கத்திலிருந்து குறித்த நேரத்தில் விவசாய செலவிற்கு ரொக்கமும், உரம், பூச்சி மருந்து முதலியன பெற்றதால் எனது விவசாயத்தை அதிக அளவு பெருக்குவதற்கு உதவியாயிருந்தது. எனது மகசூலை கூட்டுறவு சங்கம் மூலமாக விற்று எனது கடனையும் அடைத்து நல்ல பலனையும் அடைகின்றேன்.

வெற்றிப் பாதை

விவசாய விளம்பர நாடகம்

[கே. எஸ். ஆலம்கீர், பி.எஸ்.ஸி., (எஜி.), விவசாயக் கல்லூரி, கோவை]

காட்சி 12

இடம் : தோட்டத்துக் குடிசை.

பாத்திரங்கள் : ராமு, சோமு, லட்சுமி, சுசீலா, ராஜு.

லட்சுமி : (கஞ்சிக் கலயத்துடன் வந்து, கலயத்தைக் கீழே வைத்து விட்டு, ராஜுவைப் பார்த்து) ராஜு போய் அவரைக் கூட்டிட்டு வா.

ராஜு : சரிம்மா (போகிறுன், ராமு எதிரில் வருகிறுன்).

ராமு : நானே வந்துட்டேன் லட்சுமி (துண்டை உதறிக் கயிற்றுக் கட்டிலில் போட்டு உட்கார்ந்து) இன்னிக்கு என்ன கொண்டு வந்திருக்கிறே. சரியான பசி.

லட்சுமி : கம்பங் கஞ்சியும், கிளாக்காய் ஊறுகாயும் கொண்டு வந்திருக்கேன்.

ராமு : கம்பங் கஞ்சியா ? கம்பரிசி எங்கே கிடைச்சது ?

லட்சுமி : நம்ம சேர்மன் ஐயா தோட்டத்துலே விவசாயக் காலேஜுலே இருந்து விதை வாங்கிகிட்டு வந்து விதைச்சாங்களாம். கதுரு ஒண்ணு ஒண்ணரை முளம் நீளமிருந்துச்சாம். இதுலே கம்பஞ்சோறு ஆக்கிப் பாருங்கண்ணு சொல்லிக் கொடுத்தனுப்பிச்சாராம். மூக்கன் கொண்டு வந்தான்.

ராமு : அப்படியா ! கொண்டா, கொண்டா (கலயத்தை வாங்கிக் கொண்டு) ஏண்டா ராஜு நீ சாப்பிட்டயா?

ராஜு : ஓ ! ரெண்டு கலயம் குடிச்சிருக்கிறேன். இன்னும் செமிக்கிலேப்பா. நான் போயி பூவரச மரத்துலே கட்டியிருக்கிற தூரியிலே ஆடி செமிச்சுட்டு வர்ரேன் (ஓடுகிறுன்).

ராமு : ஓடு, ஓடு ! முதல்லே இடத்தைக் காலி பண்ணு. (லட்சுமியை ஏற இறங்கப் பார்த்துவிட்டு) லட்சுமி.... இப்படிப் பக்கத்துலே வந்துதான் உக்காரேன்....

லட்சுமி : உஹூம்....

ராமு : சர்தான் வா புள்ளே....(லட்சுமி அருகில் வந்து அமருகிருள்) லட்சுமி ! இந்தச் சாலேயிலே கயத்துக் கட்டிலிலே உக்காந்து கம்பங் கஞ்சியைக் குடிக்கிற துக்கும், வேப்ப மரத்துக் காத்து சிலுசிலுண்ணு அடிக்கிறதுக்கும் நீ எம்பக்கத்திலே ஒக்காந்திருக் கிறதுக்கும்....என்னம்மா இருக்கு தெரியுமா ? ....

லட்சுமி : இருக்கும்....இருக்கும்......சீக்கிரமாகக் கஞ்சி யைக் குடிச்சுட்டுப்போயி கலப்பையைப் பூடிங்க....

ராமு : என்ன லட்சுமி, வீட்டிலே தான் நாம ரெண்டு பேரும் தனியாச் சந்திச்சு பேசறதுக்கில்லே, அப்பா வும் பொடிப்பயலும் தொந்தரவா இருக்காங்க. தோட்டத்துலேயாவது......

லட்சுமி : ஐயையோ, மாமா வந்தா என்ன நினைப்பாரு. சீக்கிரம் குடிச்சுட்டு எந்திரிங்க. (A. E. O. உள்ளே நுழைகிருர்).

A.E.O. : என்ன மிஸ்டர் ராமு, சாவகாசமாக உட்கார்ந்து சாப்பிடராப்பிலே இருக்கு. (ராமுவும் லட்சுமியும் எழுந்து நிற்கின்றனர்).

ராமு : வாங்க சார் வாங்க. உட்காருங்க......(தயங்கிக் கொண்டே) நீங்க வருவீங்கன்னு நாங்க கொஞ்சங் கூட எதிர்பார்க்கலே. தெரிஞ்சிருந்தா லட்சுமி அரிசிச் சோறு ஆக்கிகிட்டு வந்திருப்பா. இல்லே லட்சுமி ? (லட்சுமி தலையை அசைக்கிருள்).

A. E. O. : பரவாயில்லே. அதனுலே என்ன. தோட்டத் துக்கு வந்தா சாப்பிட்டுத்தான் போகனும்னு என்ன அவசியம். இன்னொரு நாளைக்கு வீட்டிலே பெரிய விருந்தே சாப்பிட்டாப் போகுது.

ராமு : இதுங்களா. கம்பங் கஞ்சிங்க, நம்ம சேர்மன் ஐயா கம்பு கொடுத்தனுப்பினரு.

A. E. O. : ஆமா....அது நான் கொடுத்த விதைதான். புதுசா கண்டு பிடிச்ச ஒட்டுக் கம்பு, அதுக்கு எக்ஸ் 3-ன்னு பேரு.

ராமு : அப்படிங்களா. ரொம்ப ருசியா இருக்குதுங்க. கதுருகூட $1\frac{1}{2}$ முளம் 2 முளம் நீளமிருந்தச்சுன்னு லட்சுமி சொன்னுங்க. அந்தக் கம்பு விதை எனக்கும் கொஞ்சம் கொடுங்க. ஒரு அரை ஏக்கராவிலே போட்டுப் பார்க்கிறேன்.

A. E. O. : கட்டாயம் கொடுக்கிறேன்........உங்க தம்பி சோமு எங்கே இருக்காரு ?

ராமு : கிணத்தடியிலே இருக்கான்...... இருங்க போய் கூட்டிட்டு வர்ரேன்.

A. E. O. : பரவாயில்லே, இருக்கட்டும். நீங்க ரெஸ்ட் எடுங்க. உண்ட களைப்பு தொண்டருக்கும் உண்டுன்னு சொல்லுவாங்க. நான் வர்ரேன்.

ராமு : [சிரித்துக்கொண்டே] சரிங்க. (A. E. O. போகிருர். சற்று ஒதுங்கி நின்ற லட்சுமி அருகில் வருகிருள். அவளைப் பார்த்து) லட்சுமி நம்ம முன்னேற்றத்துக்கு எல்லோரும் எவ்வளவு ஒத்துழைக்கிருங்க பார்த்தியா.

லட்சுமி : நல்ல காலம் வந்ததுன்னு எதிரிகூட சினேகித னுயிடுவான்னு சொல்லுவாங்க.

ராமு : அதென்னமோ வாஸ்தவம் தான். எம்புள்ளே, உனக்கு இன்னொரு விஷயம் தெரியுமா ? அன்னிக்கு நம்ம டெமான்ஸ்மாஸ்டர் வரச்சொல்லியிருந்தாருன்னு நேத்து போயிட்டு வந்தேன். அதைச் சொல்ல மறந்துட்டேன், உங்கிட்டே.

லட்சுமி : என்ன மச்சான் அது ?

ராமு : வரச்சொன்னரேன்னு சொல்லி, பஞ்சாயத்து யூனியன் ஆபீசுக்குப் போனேன். அடேயப்பா ! எத்தனை பேரு நான் நீயுன்னு முந்திகிட்டு எனக்கு உதவி செய்ய வந்தாங்க தெரியுமா ? நம்ம மாட்டு டாக்டர் வந்தாரு. கோழி வளக்குறீங்களா ? நல்ல ஜாதிக் கோழி தர்ரேன்னு சொன்னரு. நமக்குக் கடன் கொடுக்குறத்துக்கு உதவி செஞ்சாரே கூட்டுறவு ஆபீஸர், அவர் வந்து இன்னும் என்ன உதவி வேணுமுன்னு கேட்டார். கைத்தொழிலுக்குன்னு ஒரு ஆபீஸர் வந்தார். சும்மா இருக்கிற நேரத்திலே நீங்க ராட்டையைச் சுத்தி நூலு நூக்குறதானே ? ஒரு நாளைக்கு ஒரு ரெண்டு ரூபாய் கிடைக்கும் அப்படீன்னு சொன்னரு. எனக்கு நறுக்குன்னு ஒரு யோசனை வந்துது. நீ பொழுதுக்குப் பொரளி பேசப் போயிடுறியே இந்த ராட்டையை வாங்கிக் கையிலே கொடுத்துட்டா என்னன்னு.

லட்சுமி : போங்க மச்சான், உங்களுக்கு எப்பவும் கேலி தான்.

ராமு : [சிரித்துவிட்டு] பார்த்தையா புள்ளே. சுதந்தரம் வாங்கி நாம் என்ன அனுபவிச்சோம்னு கேட்டியே. எவ்வளவோ அனுபவிக்கலாம். நாம் முயற்சி எடுத்துக்கிட்டா— அப்படீங்கிறதை யூனியன் ஆபீஸுக்குப் போனதுக்கு அப்புறந்தான் தெரிஞ்சுகிட்டேன். அட புள்ளே ! ஒரு முக்கியமான விஷயம் சொல்ல மறந்துட்டேனே. நம்ம பக்கத்து வீட்டுப் பரமசிவம் பத்து புள்ளைங்களைப் பெத்து போட்டு படாத பாடுபட்டுகிட்டு இருந்தானே.

லட்சுமி : ஆமா மச்சான் பாவம்.

ராமு : அவனை நம்ம பஞ்சாயத்து யூனியன் ஆபீசுலே கூப்பிட்டு விட்டு, குடும்பக்கட்டுப்பாடு செஞ்சுக்கோ, இனிமேல் குழந்தை பிறக்காது, உன்னுடைய கஷ்டமும் குறையுமுன்னு சொன்னர்களாம். பயலும் சரின்னு போய் ஆஸ்பத்திரியிலே ஒரு ரெண்டு வாரம் இருந்துட்டு வந்தான். அவன் வரும்போது கையிலே 30 ரூபாயும் கொடுத்தனுப்பிச்சாங்களாம். அதுக்கப்புறம் அவனுக்கு புள்ளை உண்டாகலயாம். கேட்டியா புள்ளே வேடிக்கையே....

லட்சுமி : ரொம்ப நல்லதாப் போச்சு மச்சான் ! அவன் பெஞ்சாதிகூட துரும்பா எளச்சுப் போயிருந்தாள்....

ராமு : [கிண்டலாக] நமக்குத்தான் அந்தக் கவலேயே இல்லே....

லட்சுமி : போங்க மச்சான்....

ராமு : இனி போகவேண்டியதுதான். மாடு வெய்யில்லே நிக்கிது....வர்ரேன். காலா காலத்திலே ஊடு போய்ச் சேரு. [சுசீலா உள்ளே வருவதைக் கண்டு] அடடே. நம்ம சுசீலா வந்திருக்கு, வாங்கம்மா வாங்க! லட்சுமிகூட பேசிகிட்டிருங்க. நான் கலப்பை பிடிக்கப் போறேன்.

சுசீலா : அக்கா ! சௌக்கியமா, உங்களைப் பார்க்கணும் பார்க்கணும்னு பல தடவை முயற்சி பண்ணினேன், இப்பத்தான் முடிஞ்சுது.

லட்சுமி : அப்படியா ! ரொம்ப சந்தோஷம்மா, அப்பா வந்திருக்காரா ?

சுசீலா : ஆமா அக்கா. உங்க மாமாகூட பேசிக்கிட்டிருக்காரு. அக்கா இங்கே நீங்க ரெண்டு பேரு மட்டும் தானு வந்திருக்கீங்க ?

லட்சுமி : இல்லேயே, ராஜுவும் வந்திருக்கானே.

சுசீலா : வேறே யாரும் வரலேயாக்கா ?

லட்சுமி : [தனக்குள் சிரித்துக்கொண்டு] சோமு கிணத்தடியிலே இருக்கான். வேறே யாரு வேணும் ?

சுசீலா : [மகிழ்ச்சியோடு] ஒண்ணும் வேண்டாம் அக்கா. நான் வர்ரேன் (போகிருள்).

லட்சுமி : பைத்தியக்காரப் பொண்ணு. எனக்கு ஒண்ணுமே தெரியாதுன்னு நினைச்சுகிட்டா. பெண்ணோட மனசு ஒரு பெண்ணுக்கா தெரியாது ? (கலயத்தை எடுத்துக் கொண்டு போகிருள்).

— திரை —

ஸ்தாபிதம் : 1885

தந்தி : நர்சரி போன் : 3210

79 வருடங்களாக சேவை செய்து வரும் கான் சாஹிப் S. K. I. ஹாஜீ அப்துல் ரஹிமான் சாஹிப் ஸ்தாபனம்.

சேலம் நர்சரி கார்டன்ஸ், சேலம்.

புகழ்பெற்ற ஒட்டு மாஞ்செடிகள், எலுமிச்சை, தென்னை, இதர பழச் செடிகள், அலங்காரச் செடிகள், காய்கறி, புஷ்ப விதைகளுக்குச் சிறந்த இடம்.

Proprietor :

S. K. A. அப்துல் ரஜாக் சாயுபு,
சேலம் நர்சரி கார்டன்ஸ்,
செரி ரோடு, சேலம்-7.
(S. India.)

1964-ம் ஆண்டு மார்ச் மாத கால நிலை அறிக்கை

(சி. பாலசுப்ரமணியன், சி. ரங்கநாதன், விவசாய காலநிலை ஆய்வுப் பிரிவு, கோவை.)

இந்த மாதம் முதல் தினத்தில் தமிழகமெங்கும் பொதுவாக வரட்சி நிலவியது. 1964-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 2-ந் தேதி தமிழகத்தின் தென் பகுதிகளில் மட்டும் சிறிது மழை சிற்சில இடங்களில் பெய்தது. அதனீ பின்னர் 1964-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ந் தேதி வரை தமிழகமெங்கும் வரட்சி நிலவியது. 16, 17 தேதிகளில் தமிழகத்தின் தென் பகுதியில் சிற்சில இடங்களில் மழை பெய்தது. 1964-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 18-ம் தேதி மறுபடியும் வரட்சிநிலை நிலவியது. 19, 20 தேதிகளில் தமிழகத்தின் தென் பகுதிகளில் சிற்சில இடங்களில் மழை பெய்தது. 21-ம் தேதி தமிழகத்தின் வடபகுதிகளில் ஆங்காங்கும் தென் பகுதி களில் பரவலாகவும் மழையிருந்தது. 22 முதல் மூன்று நாட்கள் தமிழகமெங்கும் பரவலாக மழையிருந்தது. 25 தேதி முதல் இம்மாதம் முடிய காலநிலை வரண்டிருந்தது. ஆனுல் 26,29 தேதிகளில் சிற்சில இடங்களில் மழையிருந்தது.

காலநிலையும் பயிர் வளர்ச்சியும்

செங்கற்பட்டு, தென்னுற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் இம்மாதம் மழையில்லை. திரூர் குப்பம் பகுதியில் சொர்ணவாரி, நவரை நெற்பயிர்களில் சிறிதளவு தூர் அழுகல் நோய் காணப்பட்டது. குடியாத்தம் பகுதியில் கரும்புப் பயிரை துளைப்பான்கள் (Early shoot borer and Top shoot borer) மிதமாகத் தாக்கின.

திண்டிவனத்தில் மழையின்மையால் எப்பயிர் வாட்டமுற்றது. இங்கு நிலக்கடலைப் பயிரில் சிறிது அசுக்களும், சோளப்பயிரினும், ராகியிலும் குருத்துப்பூச்சிகளும்காணப் பட்டன.

தஞ்சாவூர் மாவட்டத்தில் சுமாராக மழையிருந்தது. இங்கு பெய்த மழை பசுந்தாளுரச் செடிகளுக்கும், தானியப் பயிர்களுக்கும் உகந்திருந்தது. தாளடி நெல் அறுவடைக்கு வந்தது. இங்கு நெற்பயிரை குறுத்துப் பூச்சிகளும், கொள்ளை நோயும், இலைப்புள்ளி நோயும் மிதமாகத் தாக்கின. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பெய்த சிறிது மழையும் எல்லா பியிர்களுக்கும் எற்றதாயிருந்தது.

இராமனுதபுரம் மாவட்டத்தில் சுமாராக மழையிருந்தது. இம்மழையால் நிலக்கடலை, பருத்தி முதலியன பெரிதும் பயனுற்றன. சிவகங்கைப் பகுதியில் பருத்தியில் சிறிதளவு நாவாய்ப் பூச்சிகளும், காயப் புழுக்களும் தென்பட்டன. ஸ்ரீவில்லிபுத்தூரில் பெய்த மழையால் நிலங்கள் உழுது பண்படுத்தப்பட்டன. இங்கு மிளகாய்ப் பயிரும், பருத்தியும் அறுவடைக்கு வந்தன. எள் விதைப்புக்கு வந்தது. இங்கு எள்பயிரில் வெட்டுக்கிளிக்கள் சிறிது அளவு காணப்பட்டன.

இம்மாதம் திருநெல்வேலி மாவட்டத்தில் சற்று அதிகமாக மழை பெய்தது. கோவில்பட்டி பகுதியில் பருத்தியில் காய் உதிர்தல் அதிகமாக காணப்பட்டது. பருத்தியை காய் புழுக்களும், நாவாய்ப் பூச்சிகளும், அசுவும், மென்மையாகவும், மிளகாய்ப் பயிரை அழுகல் நோயும் வேர் ஞூரல் நோயும் (Root rot) கடுமையாகவும்! தாக்கின. அம்பா சமுத்திரம் பகுதியில் பெய்த மழையினுல் நெல் அறுவடை தடங்கலாயிற்று. சங்கரன் கோயில் பகுதியில் நிலங்கள் உழுது பண்படுத்தப்பட்டன. மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி பகுதியில் இலேசான மழையிருந்தது. இம் மழையால் நெல், மிளகாய், பருத்தி காய்கறிப் பயிர்கள் தானியப்பயிர்கள் வெகுவாகப் பயனுற்றன. இம்மழையால் கரும்பு நடவும் தலைக்கொள்ளப்பட்டது. இங்கு நிலக்கடலை, பயிரில் சுருள் பூச்சியும், பருத்தியில் அசுவும் அதிக அளவில் காணப்பட்டன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமாரான மழையிருந்தது. நாகர்கோயிலில் பெய்த மழை நெல் நடவுக்கு உதவியது கன்னியாகுமரிப் பகுதியில் மாமரத்தில் சாம்பல் நோய் சிறிது காணப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் இலேசான மழை பெய்தது. ஆத்தூர் பகுதியில் கார் நெல் நடவுக்கு வந்தது. கொள் அறுவடைக்கு வந்தது. இங்கு பருத்தியில் அசுக்கள் பெருமளவில் தென்பட்டது. நாமக்கல் பகுதியில் இம்மாதம் மழையில்லை. இங்கு மிளகாய் கார் நெல் முதலியன நடவுக்கு வந்தன. நெற்பயிரை கொள்ளை நோய், நாவாய் பூச்சிகள், குறுத்துப் பூச்சிகள் கதிர்வண்டு முதலியன வெகுவாகத் தாக்கின. சோளப்பயிரில் இலைப் பேனும், குறுத்துப் பூச்சியும் சிறிது காணப்பட்டது. பருத்தியில் கருங்கிளை நோயும், காய் அழுகல் நோயும், திரிப்ஸ், நாவாய்ப் பூச்சி, காய்ப்புழுக்களும் வெகுவாகக் காணப்பட்டன. மிளகாய்ப்பயிரை காய் அழுகல் நோயும், திரிப்ஸும் வன்மையாகத் தாக்கின. நிலக்கடலையை "டிக்கா" இலைப்புள்ளி நோயும், திரிப்ஸும், அசுவும் மென்மையாகத் தாக்கின. மரவள்ளியில் பேனும், கத்திரியில் புள்ளிவண்டும், வாழையில் இலைப்புள்ளி நோயும் காணப்பட்டன.

நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் பகுதியில் மட்டும் சற்று அதிகமாக மழையிருந்தது. எஞ்சியபகுதிகளில் மழையின்மையால் உருளைக் கிழங்குப்பயிர் வாட்டமுற்றது. இப் பயிரில் வெட்டுப்புழுக்கள் சிறிது காணப்பட்டன.

கோயமுத்தூர் மாவட்டத்தில் இம் மாதம் மழையில்லை. மதுக்கரை, தொண்டாமுத்தூர் பகுதிகளில் சோளம், நிலக்கடலை விதைப்பும், ராகி நடவும் நடைபெற்றன. நெற்பயிரையும் ராகியையும் நாவாய்ப்பூச்சிகளும் திரிப்ஸம் கடுமையாகத் தாக்கின.

இம்மாதத்தில் 2—3—64 முதல் மூன்று நாட்களில் மட்டும் இரவு வெப்பம் சராசரிக்கு உயர்ந்திருந்தது.

இம் மாதத்தில் குறிப்பிடத்தக்க மழையளவுகளும் பிராந்திய மழையளவுகளும் வருமாறு:—

குறிப்பிடத்தக்க மழையளவுகள்

(அங்குலத்தில்)

வரிசை எண்	தேதி	இடத்தின் பெயர்	மழையளவு
1	21—3—64	அம்பாசமுத்திரம்	1·25
2	22—3—64	கோவில்பட்டி	1.85
3	22—3—64	பாம்பன்	1·10
4	29—3—64	கூனூர்	4·00

பிராந்திய மழையளவுகள் (அங்குலத்தில்)

வரிசை எண்.	பிராந்தியத்தின் பெயர்.	இம் மாத மொத்த மழை யளவ.	சராசரி யிலிருந்து மாறுபாடு.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)
1	வட பிராந்தியம்	இல்லே	—0·2	குறைவு·
2	கீழ் கரைப் பிராந்தியம்	..	..	..
3	மத்திய பிராந்தியம்	0·3	—0·4	குறைவு.
4	தென் பிராந்தியம்	2.2	+0·5	அதிகம்.
5	மலேப் பிராந்தியம்	1·7	—0·2	குறைவு.

1964-ம் ஆண்டு மார்ச் மாத கால நிலே அறிக்கை மழையளவு (அங்குலத்தில்)

இடத்தின் பெயர்.	இம்மாத மொத்த மழை அளவு-	சராசரி யிலிருந்து மாறுபாடு.	ஜனவரி 1-ம்தேதி முதல் மொத்த மழை அளவு.
(1)	(2)	(3)	(4)
வட பிராந்தியம்			
சென்னே (மீனம்பாக்கம்)	இல்லே.	—0·3	இல்லே
திரூர் குப்பம் *	இல்லே	—0·1	இல்லே
வேலூர்	இல்லே	—0·3	இல்லே
குடியாத்தம் *	இல்லே	—0·2	இல்லே
கீழ்கரைப் பிரதேசம்			
பாலூர் *	இல்லே	—0 5	இல்லே
திண்டிவனம் *	0·1	—0·4	0·1
கடலூர்	0·3	—0·4	0·3
நாகப்பட்டணம்	†	—0·8	†
ஆடுதுரை *	1·5	—0·9	1·5
பட்டுக்கோட்டை *			
மத்திய பிராந்தியம்			
சேலம்	0·1	—0·4	0·1
சேலம் *	0·6	+0·1	0·6
கோயம்புத்தூர் *	இல்லே	—0·8	இல்லே
கோயம்புத்தூர்	†	—0·5	†
ஆளியார் நகர் *	0·2	—0·6	0·2
திருச்சிராப்பள்ளி	0.6	—0·2	0·6
தென் பிராந்தியம்			
மதுரை	இல்லே	—0·7	இல்லே
பாம்பன்	1·6	+0·9	2·4
கோவில்பட்டி *	4·7	+3·6	5·1
பாளேயங்கோட்டை	2·6	+1·5	3·2
அம்பா சமுத்திரம் *	4·5	—1·7	5·8
நாகர்கோயில் *	0·6	--0·5	0·6
கன்னியாகுமரி *	1·4	+0·3	1·9
மலேப் பிராந்தியம்			
கோடைக்கானல்	2·1	+0·3	2·1
கூனூர் *	4·4	—0·1	5·7
உதகமண்டலம் *	0·2	—1·1	0·2
நஞ்ச நாடு *	0·2	—1·0	0·3

குறிப்பு:— * சென்னே விவசாய இலாகாவின் ஆராய்ச்சிப் பண்ணேகள். † சரியாண அளவு=0·04".

மரமும் ஓர் வரலாற்றுச் சின்னம்

(M. காசிவிஸ்வநாதன், T. ரகோத்தம ராவ்,
விரிவினேப் பிரிவு கோவை.)

" முன்னேற்றமடைந்துள்ள ஒரு நாட்டின் உயிர்ச் சின்னமாக வளரும் மரம் விளங்குகிறது. ஒரு மரத்தை வெட்டி வீழ்த்திவிடுவது மிக எளிது. ஆனால் ஒரு மரத்தை நட்டுப் பாதுகாத்து வளர்க்க பல ஆண்டுகள் ஆகின்றன. ஆகவே எந்த ஒரு மரத்தையும் அனுவசியமாக வெட்டி வீழ்த்தக்கூடாது " என்ற காலம் சென்ற நம் தலேவர் ஜவஹர்லால் நேருவின் பொன் மொழிகளே நாடெங்கும் பதினேந்தாவது ஆண்டு மரம் நடும் காலத்தில் நினேவு படுத்திக்கொள்வது நல்லது. பண்டைக் காலந் தொட்டே மரம் நடுதல், காடுகளேப் பாதுகாத்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை மக்கள் உணர்ந்திருக்கிருர்கள். பண்டைக் கால மக்கள் மரம் நடுதலே ஒரு புனிதமான பணியாகவும், இயற்கை நமக்கு அளிக்கும் பலவகை வசதிகளுக்குக் கைம்மாருகவும் கருதி இப் பணியில் ஈடுபட்டனர். காடுகளிலும் அவற்றின் சுற்றுப் புறங்களிலும் வாழ்ந்துவந்த மக்கள் ஒவ்வொரு மரத்தின் பூக்கும் காலத்தை ஒரு விழாவாகக் கொண்டாடினர். ஆனல், நாளடைவில் இயற்கை இன்பத்தை நுகர்ந்து போற்றும் தன்மையும் மரம் செடி கொடிகளின்பால் செலுத்தப்பட்ட அன்பும் குறைய ஆரம்பித்தன. ஆங்காங்கே மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டு காடுகள் அழிக்கப்பட்டன. ஆகவே, நாளுக்கு நாள் பசுமையின் பரப்பு குறைந்துகொண்டே வந்தது. இத்தகைய செயல் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டே வந்தால், விவசாயம், தோட்டக்கலே, காடுவளர்ப்பு, வன விலங்குகளின் வாழ்க்கை ஆகியவை பாதிக்கப்பட்டு இயற்கையின் நிலே முரணடைந்துவிடும். மரங்களும், காடுகளும் அழிக்கப்படுவதனுல் ஏற்படும் நிலேயற்றபருவக் காற்று, நிச்சயமற்ற குறைவான மழை ஆகியவற்றை நாம் எற்கனவே அனுபவித்து வருகிருேம்.

மரங்கள் நமக்குப் பல வகைகளிலும் உதவுகின்றன. அடுப்பெரிக்க விறகாகவும், கோடை வெய்யிலின் கொடுமையைக் குறைக்கும் குளிர்ந்த நிழலேத் தருவதற்கும், நம் வீட்டின் கூரை கதவிலிருந்து நாம் எழுத உபயோகிக்கும் மேசை நாற்காலி வரை தயாரிக்கவும், கலப்பை மண்வெட்டியின் கைப்பிடி போன்ற பல விவசாயக் கருவிகளுக்கும், கண்கவர் மலர்கள், தீஞ்சுவைக் கனிகள், வாசனேத் திரவியங்கள், பசுந் தழைகள், தீவனப் பொருட்கள் போன்ற பலவகையான பொருட்களேத் தந்தும் பறவை, விலங்கினங்களுக்கு இருப்பிடமாகவும் மனிதனின் வாழ்க்கையின் ஆரம்பத்தில் தேவையான தொட்டில் முதல் அவன் வாழ்வின் அந்தம் வரையிலும் மரம் பலவாருகவும் உபயோகமாகிறது.

ஆகவே இவ்வாருகப் பற்பல வகைகளில் உபயோகமாகும் மரங்களே நாம் மேலும் மேலும் நம் வீடு, பண்ணேகளேச் சுற்றிலும், சாலே, குளங்களின் இருமருங்கிலும், புல் வெளிகளிலும் நடவேண்டும்.

நாட்டின் செழிப்பிற்கும், எதிர்காலத்திற்கும் மரங்களே நடவும் !



மரமும் ஓர் வரலாற்றுச் சின்னம்

Registered No. M-4646.

©
தமிழ்நாடு அரசாங்கம்
1964

கொடிப்பூவரசு
ஐப்போமியா

சிறந்த தழை எருச்செடி

பல வருடம் பலன் தரும் புதர் போன்று வளரும் தழை எருச்செடி.

பயிரிட்டு விருத்தி செய்வதும் சுலபம்.

நன்செய், புன்செய் இரு நிலங்களிலும் செழித்து வளரும்.

மழைக்குப் பின் 9 அங்குல நீள குச்சிகளை வரப்பு, வேலி, பாதையோரம், புறம் போக்குகளில் நட்டால் விரைவில் தளிர் விட்டு அடர்ந்து வளரும்.

ஒரு ஏக்கர் நிலத்தின் நான்கு வரப்புகளிலும் நட 700 முதல 750 குச்சிகள் தேவை.

நட்ட முதல் இரு பருவங்களில் இரண்டு முறையும், பின்னர் மூன்று முதல் நான்கு முறையும் தழை கழிக்கலாம்.

ஒவ்வொரு தட்வையும் 300 முதல் 350 கிலோ தழை கிடைக்கும்.

சிறிது நீர்ப்பாசனத்துடன் தோட்டத்தின் வரப்பு களில் நட்ட கொடி இரட்டிப்பு மகசூல் கொடுக்கும்.

கிளைகளையும் தழைகளையும், வெட்டி]" கம் போஸ்ட்" தயாரிக்கலாம்.

கிளைகளும் தழைகளும் மென்மையாக இருப்பதால் குழிகளிலிட்ட 3, 4 மாதங் களில் நன்கு மக்கிய கம்போஸ்ட்டாகிறது.

பாதையோரங்களில் நட்ட செடி. தழை தருவதுடன். வெளிறிய ஊதா நிறமான இதன் பூக்கள் கவர்ச்சியும் அளிக்கும்.

குறுகிய காலத்தில் செழிப்பாக புதர்போல் படர்ந்து வளர்ந்து அதிக தழை கொடுக்கும் "கொடிப்பூவரசை" நிறைய நடுங்கள்.

தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு விவசாயச் செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு விவ சாயத் துறை நெறியாளரால் வெளி யிடப்பட்டது.